Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, FEBRUARY 2, 2022

புதன்கிழமை பெப்ரவரி 02, 2022 | ஒளி: 07 கதிர்: 221 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை, எதிர்பார்க்காத வகையில் அதிகரித்துள்ளன என, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வாரம் வரையிலும் ஒரு பெரல் மசகு எண்ணெயின் விலை 81 டொலருக்கும் 83 டொலருக்கும் இடையில் இருந்தது. எனினும், தற்போது அதன் விலை 91 டொலர்க உயர்ந்துள்ளது.

தொடர்ச்சி P2

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக

# வீதியில் திரண்ட யாழ். மீனவர்கள்

**போக்குவரத்துத் தடை; பொலிஸார் குவிப்பு**

**மருதங்கேணி பிரதேச செயலகமும் முற்றுகை**

*எஸ்.நிதர்ஷன், எஸ் தில்லைநாதன்*

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக யாழ்ப்பாணம், பொலிகண்டி மீனவர்கள், நேற்று (01) வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பருத்தித்துறை - பொன்னாலை வீதியின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.





வீதிகளின் குறுக்கே படகுகள், வலைகளைப் போட்டு, தமது போராட்டத்தை மீனவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

வீதியை மறிக்காது போராட்டத்தை மேற்கொள்ளுமாறு போராட்டக்காரர்களிடம் பொலிஸார் கோரினர். எனினும், மீனவர்கள் தமது எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்தனர்.

அத்தோடு, மருதங்கேணி பிரதேச செயலகத்தை மீனவர்கள் முற்றுகையிட்டமையால், உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்குள் நுழைய முடியாமல் வெளியில் காத்திருந்தனர்.

தொடர்ச்சி P2

அண்மைய முட்டைத் தாக்குதல்கள்

# அரசாங்கம், சமூகத்தின் சீரழிவையே காட்டுகின்றன



மக்கள் விடுதலை முன்னணி மீது அண்மையில் முட்டை தாக்குதல்கள் மேற்கொண்டமையும், ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் மீதான முட்டைத் தாக்குதலும் அண்மைக்காலமாக அரசாங்கமும் சமூகமும் சீரழிந்து வருவதன் அளவு இதுவாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தமிழக மீனவர்களை சிறைப்பிடிக்க யாழ். மீனவர்கள் முயற்சி:

# வடக்கு நடு கடலில் பதற்றம்

**21 இந்திய மீனவர்கள் கைது: விசைப்படகுகளும் சிக்கின**

*வி.நிதர்ஷன்*

எல்லை தாண்டி மீன் பிடித்த தமிழக மீனவர்களை யாழ். வடமராட்சி மீனவர்கள் நடுக் கடலில் சுற்றிவளைத்து சிறைப்பிடிக்க முயற்றமையால், அங்கு நேற்று முன்தினம் (31) இரவு பதற்றம் ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

# இருவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து வெளிநாட்டு பணம், வெளிநாட்டு மதுபான போத்தல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் கூறினர்.

தொடர்ச்சி P2

நாமலுக்கு எதிரான

# பணச்சலவை வழக்கு ஒத்திவைப்பு



விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவருக்கு எதிரான பணச்சலவை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால், நேற்று (01) ஒத்திவைக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 241வது பிரிவின்படி, இந்த வழக்கில் இரண்டாவது, ஆறாவது குற்றவாளிகள் ஆஜராகாத நிலையில், வழக்கு விசாரணையைத் தொடர மேல்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

மக்களையும் வீடுகளையும் எரித்த ஜே.வி.பியினரின்

# உள்வீட்டு சண்டையாக இருக்கலாம்

மக்கள் விடுதலை முன்னணியானது, வீடுகளையும் மக்களையும் எரித்த வரலாற்றைக் கொண்ட கட்சி என்று குறிப்பிட்ட இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இது ஜே.வி. பி உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட சண்டையாக அல்லது அவர்களுக்கு இடையேயான சண்டையாகக் கூட இருக்கலாம் என்று தெரிவித்தார்.

அண்மைய சேறு பூசும் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள சக்தி, அரசாங்கம்தான் என்ற ஜே.வி.பியின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

சேறு பூசும் தாக்குதலின் பின்னணியில் ஜே.வி.பி இருந்ததா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# 'லித்' வழக்கில் இருந்து பசில் விடுவிப்பு



ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ஒரு சாதகமான வழி ஏற்படும் வகையில், அவருடைய புகைப்படத்துடன், 50 இலட்சம் நாட்குறிப்பு (லித்) அச்சடித்து அரசுக்கு 29.4 மில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில், வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

ரயிலுடன் ஓட்டோ மோதியதில்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலி



காலி, ரத்கம பொலிஸ் பிரிவுட்கு உட்பட்ட ரில்லம்ப ரயில் கடவையில் பயணித்த ஓட்டோ, ரயிலுடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (01) முற்பகல் பெலியத்தையிலிருந்து சென்ற ரஜரட்ட ரெஜின ரயிலில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான ஓட்டோவில், சாரதி (வயது 46), சாரதியின் மனைவி (வயது 47), சாரதியின் தந்தை, சாரதி மனைவியின் தாய் (வயது 84) ஆகியோர் பயணித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, ஓட்டோ சாரதி, சாரதியின் தந்தை, சாரதியின் மனைவியின் தாய் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

பின்னர், அங்கு சிகிச்சை பெற்றுவந்த சாரதியின் மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பம்பலபிட்டி கட்டடத்தில் இருந்து விழுந்து மாணவன் மரணம்:

# 'ஐஸ்' பயன்படுத்தி இருந்ததாக தகவல்

**சி.சி.டி.வி காட்சிகளைக் கொண்டு விசாரணை**



பம்பலபிட்டி, கிறெஸ்டர் பிரதேசத்திலுள்ள தொடர்மாடி குடியிருப்பொன்றின் 7ஆவது மாடியிலிருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்த 15 வயது மாணவனின் பிரேத பரிசோதனையில், அவர் 'ஐஸ்' போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

குடும்பத்தில் ஒரே மகனான இம்மாணவன், கடந்த 29ஆம் திகதி, வீட்டில் தாயும் தந்தையும் இல்லாத நேரத்தில் இவ்வாறு கீழே விழுந்துள்ள நிலையில், அவர் கொரோனா தொற்றுக்குள்ளானவனர் எனத் தெரியவந்தது.

தொடர்ச்சி P2

லக்விஜய அனல் மின் நிலையத்தின்

# 3ஆவது மின்பிறப்பாக்கி மீண்டும் செயலிழப்பு

**மின் துண்டிப்பு அமலாகாது என்றும் தெரிவிப்பு**

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீண்டும் நேற்று (01) செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

இதன் விளைவாக தேசிய மின்கட்டமைப்பு 270 மெகாவோட் மின்சாரத்தை இழக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனவும் சபை அறிவித்தது.

தொடர்ச்சி P2

# முட்டை வீச்சுக்கு அரசாங்கம் அதிருப்தி



தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க பயணித்த வாகனத்தின் மீது, முட்டைகள் வீசப்பட்ட சம்பவத்தை அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளதுடன், அச்சம்பவம் குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது,

அரசாங்கத் திணைக்களத்தில் நேற்று (01) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே,

தொடர்ச்சி P2

பொலிஸார் மீது துப்பாக்கி கொள்ளையர்கள் சூடு

# கொள்ளையர் காயம்; பிக்கு உட்பட மூவர் கைது

**கார், மோட்டார் சைக்கிள் சிக்கின: காரைத்தீவில் சம்பவம்**

*கனகராசா சரவணன், சகா, நடராஜன்*

பதுங்கியிருந்த கொள்ளையர்களை மடக்கிப்பிடிக்கச் சென்ற பொலிஸார் மீது, கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், கொள்ளையர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம், காரைதீவு வெட்டுவாய்கால் பகுதியில், திங்கட்கிழமை (01) இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



சம்பவத்தை அடுத்து, பிக்கு ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த கார், மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைக் கோஷ்டியினர், அம்பாறை, அக்கரைப்பற்றில் நீதவான் ஒருவரின் வீடு உட்பட பல வீடுகளில் கொள்ளையிட்டு வந்தவர்கள் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அந்தக் கொள்ளைக் கோஷ்டியினர், காரைதீவு, வெட்டுவாய்கால் பகுதியில் பதுங்கியிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வீதியில் திரண்ட யாழ். மீனவர்கள்

கடந்த வியாழக்கிழமை கடலுக்குச் சென்ற வத்திராயன் பகுதியைச் சேர்ந்த பிரேம்குமார் மற்றும் தணிகைமாறன் ஆகிய இரு மீனவர்கள் காணாமல் போயிருந்த நிலையில், திங்கட்கிழமை(31) அவர்களது சடலங்கள் ஆழியவளை கடற்கரையில் கரையொதுங்கின.

அவர்கள் இருவரும் இந்திய இழுவைப் படகுகளால் மோதி உயிரிழந்ததாக தெரிவித்தே, மருதங்கேணி பிரதேச செயலகத்தை மீனவர்கள் முற்றுகையிட்டனர்.

பிரதேச செயலகத்துக்குள் அதிகாரிகள் செல்லாதவாறு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு, மருதங்கேணி- தாளையடி பிரதான வீதியையும் மறித்து நடு வீதியில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், நண்பகல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டம் நடைபெற்ற இடத்துககு வருகை தந்திருந்தார்.

அமைச்சருக்கு அங்கு போராட்டத்தில் ஈடுபட்டோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்படி இருந்தும் அமைச்சர் மீனவர்களுடன் கலந்துரையாடினார். தான் ஜனாதிபதி, பிரதமர், இந்திய தூதுவருடன் கலந்துரையாடி பிரச்சினையை தீர்த்து வைப்கதாக அமைச்சர் உறுதியளித்தார்.

அது தொடர்பில் எழுத்து மூலமாக தமக்குத் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அமைச்சரிடம் கேட்டிருந்தனர். இதனையடுத்து, ஒரு நம்பிக்கையில் தான் இந்த உறுதிமொழியை தெரிவிக்கிறேன் எனக் கூறிவிட்டு அமைச்சர் திரும்பிச் சென்றுவிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், உயிரிழந்த இருவரினதும் இறுதிக்கிரியைகள் நடைபெற இருப்பதால், இறுதிக்கிரியை முடித்து வைப்பதற்காக இப்போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தவுடன், கடற் தொழிற்சங்கங்கள் விளையாட்டுகளுடன் கலந்துரையாடி மாபெரும் ஒரு போராட்டத்தை மீண்டும் முன்னெடுப்பதாக தெரிவித்தனர்.

# வடக்கு நடு கடலில் பதற்றம்

இதனையடுத்து, இரண்டு மீன்பிடி விசைப்படகுகளுடன், 21 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நாகை மாவட்டம், வேதாரண்யம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 400க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்குள் சென்றுள்ளனர்.

அதேவேளை, இரு மீனவர்களின் மரணம் காரணமாக கோபத்தில் இருந்து யாழ். வடமராட்சி மீனவர்கள், தங்களது பைபர் படகுகளில் கடலுக்குள் சென்று எல்லை தாண்டி வந்துள்ள தமிழக மீனவர்கள் படகுகளை சுற்றி வளைத்து சிறை பிடிக்க முயன்றுள்ளனர்.

அப்போது வடமராட்சி கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்து கொண்டிருந்த நாகை மாவட்டத்தை சேர்ந்த இரண்டு படகையும் அதிலிருந்த 21 மீனவர்களையும் இலங்கை மீனவர்கள் சுற்றி வளைத்து சிறைபிடித்து கரைக்கு கொண்டு வர முயற்சித்தனர்.

அதன்போது, அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த இலங்கைக் கடற்படையினர், இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட இரண்டு படகையும் அதிலிருந்த 21 மீனவர்களையும் கைது செய்து, மயிலட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும், நடுக்கடலில் எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்த தமிழக படகை சுற்றிவளைக்கும் போது, படகில் இருந்த தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள் மீது கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டு வீசி தாக்கியதாக இலங்கை மீனவர்கள் குற்றசாட்டியுள்ளனர்.

சிறைபிடிக்கப்பட்ட 21 மீனவர்களையும் இரண்டு படகையும், யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பின் பருத்திதுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# உள்வீட்டு சண்டையாக இருக்கலாம்

தற்போதைய அரசாங்கமானது, ஜனநாயக நடைமுறையை தெளிவாக நம்பி பாதுகாக்கும் அரசாங்கமாக இருப்பதாகவும் நாட்டில் அரசியல் சக்திகள் இணைந்து வாழ வேண்டும் என்று நம்பும் அரசாங்கமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்ற அமைச்சர், எனவே இதை யார் செய்தார்கள் என்பது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# முட்டை வீச்சுக்கு அரசாங்கம் அதிருப்தி

அமைச்சரவையின் இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சம்பவம்தொடர்பில், பக்கச்சார்ப்பற்ற விசாரணைகளை பொலிஸார் முன்னெடுப்பர் என்றும் நம்பிக்கைத் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தை அரசாங்கம் என்றவகையில் கடுமையாக கண்டிக்கின்றது. இலங்கை ஜனநாயக நாடாகும். அதில், கருத்துரிமை, பேச்சு சுதந்திரம் அதிகமாகவே உள்ளது.

ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் பொதுமக்களுக்கு ஜனாதிபதி ஓர் இடத்தை ஒதுக்கிவைத்துள்ளார் என்று தெரிவித்த அவர், தமது அரசாங்கத்தின் கீழ், ஒவ்வோர் அரசியல் கட்சிகளுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

# 3ஆவது மின்பிறப்பாக்கி மீண்டும் செயலிழப்பு

எவ்வாறாயினும் மின் இணைப்பை துண்டிக்க வேண்டிய அவசியமில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நேற்று (01) பிற்பகல் அறிவித்துள்ளார்.

லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திலுள்ள இந்த மின்பிறப்பாக்கி பழுதுபார்க்கப்பட்ட பின்னர், நேற்று முன்தினம் முதல் (31) தேசிய தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையிலேயே அதில் மீண்டும் பழுது ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மின் கட்டமைப்பில் மொத்தம் 300 மெகாவோட் மின்சாரத்தை சேர்க்கும் இந்த மின்பிறப்பாக்கி, 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மா ஆரம்பத்தில் திடீரென செயலிழந்தது.

கடந்த மாதம் இந்த மின்பிறப்பாக்கி செயலிழந்ததைத் தொடர்ந்து, களனிதிஸ்ஸ அனல்மின் நிலையம் அதற்குப் பதிலாக 300 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# மனைவி மீது கத்திக்குத்து: கணவன் கைது

ஹப்புத்தளையில் பெண் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஹப்புத்தளை நகரின் பிரதான வீதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

பதுளை □ தெமோதர பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவர் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணவருக்கும் மனைவிக்குமிடையே ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வெட்டுக்காயங்களுக்குள்ளான பெண் தியத்தலாவ வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் கணவர் வைத்தியசாலையின் பொலிஸ் காவலிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

# அரசாங்கம், சமூகத்தின் சீரழிவையே காட்டுகின்றன

கொள்கையில் இருந்து விலகி, வேலைத்திட்டங்கள் செயலிழந்து, விழுமிய மதிப்புகளால் வீழ்ச்சி கண்ட நாட்டால் முன்னேற முடியாது என தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், முட்டை தாக்குதல் போன்ற கேவலமான செயல்கள் சீரழிந்த அரசாங்கத்தின் யதார்த்தத்தையே புலப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணனி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான 'பிரபஞ்சம்'திட்டத்தின் 11 ஆவது கட்டம் மதவாச்சிய அகுநொச்சி மகா வித்தியாலய நேற்று (01) இடம்பெற்றபோதே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் முகமாக தகவல் தொழில்நுட்பப் புரட்சியை முன்கொண்டு செல்வது அதன் ஒரு தொடக்கங்களில் ஒன்றாகும் என தெரிவித்த அவர், அதிகாரம் இல்லாமலயே, தான் குறித்த புரட்சியை நடத்துவதாகவும் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக தகவல் தொழில் நுட்ப

> **அமெரிக்க பில்லியன் டொலர் வியாபாரம் என அடையாள ப்படுத்தப்படும் கங்வேனன் வியாபாரம் உலகில் மிக வேகமாக வளர்ச்சி கண்டுள்ள**

புரட்சி, டிஜிட்டல் பொருளாதாரப் புரட்சி என்பவற்றைக் கூறலாம் எனவும் இந்த புரட்சி உலகின் பல நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்க பில்லியன் டொலர் வியாபாரம் என அடையாளப்படுத்தப்படும் கங்வேனன் வியாபாரம் உலகில் மிக வேகமாக வளர்ச்சி கண்டுள்ளதாகவும் இவற்றை உருவாக்கும்போது நம் நாட்டிலும் அந்நியச் செலாவணி பிரச்சினையோ பற்றாக்குறையோ ஏற்படாது எனவும் குறிப்பிட்டார்.

பிரபஞ்சம் போன்ற வேலைத்திட்டங்கள் குறித்து சிலர் கபடத்தனமாக பேசுகின்றனர் என தெரிவித்த எதிர்கட்சி தலைவர், அவ்வாறானவற்றை தான் கருத்திற் கொள்வதில்லை என தெரிவித்தார்.

இந்நாட்டின் குழந்தைகளுக்காக நாடு முழுவதும் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பணச்சலவை வழக்கு ஒத்திவைப்பு

2013 மற்றும் 2014 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில், நாமல் ராஜபக்ஷவிற்கு சொந்தமான கோவர்ஸ் கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் ரூ.30 மில்லியன் பணத்தை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

நாமல் ராஜபக்ஷ, இந்திக கருணாஜீவ, சுஜானி போகொல்லாகம, இரேஷா சில்வா, நித்ய சேனானி சமரநாயக்க மற்றும் கோவர்ஸ் கார்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு எதிராக பணச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் 11 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

மசகு எண்ணெயின் விலை, கொஞ்சம் கொஞ்சமாக குறையுமென எதிர்பார்க்கப்பட்டாலும், விலை அதிகரிக்கப்பட்டமையால், பொருளாதார பிரச்சினைகளுக்குள் சிக்கிக்கொண்டிருக்கும் நாடுகள் பாரிய பிரச்சினைகளுக்கு சிக்கியுள்ளன என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இருவர் கைது

அவர்களிடமிருந்து 200 யூரோ, 58 அமெரிக்க டொலர், ஆறு இலட்சத்து ஐயாயிரத்து 430 ரூபாய், ஒரு லீட்டர் கொள்ளளவான 49 மதுபான போத்தல்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 'லித்' வழக்கில் இருந்து பசில் விடுவிப்பு

அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொருளாதார அபிவிருத்தி முன்னாள் அமைச்சரும், தற்போதைய நிதியமைச்சருமான பசில் ராஜபக்ஷ, அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருடன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் கித்சிறி ரணவக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பிரதிவாதியின் சாட்சியங்கள் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்தவே மேற்கண்டவாறு நேற்று (01) உத்தரவிட்டார்.

வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சாதாரண சந்தேகமின்றி நிரூபிக்கப்படாமையால், பிரதிவாதிகளை வழக்கிலிருந்தே விடுவிப்பதாக, நீதிபதி அறிவித்தார்.

முறைப்பாட்டாளரின் சாட்சி விசாரணைகள் நிறைவடைந்து விட்டதாக வழக்கின் கடந்த தவணையின் போது, அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், பிரதிவாதியின் சாட்சிகளை அழைப்பது தொடர்பில், தீர்மானிப்பதற்காக வழக்கு நேற்று (01) அழைக்கப்பட்டது. இதன்போது, பிரதிவாதிகளின் சாட்சிகள் அழைக்கப்படாமலே பிரதிவாதிகள் இருவரையும் விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# 'ஐஸ்' பயன்படுத்தி இருந்ததாக தகவல்

இந்த நிலையில், கட்டடத்தில் உள்ள சி.சி. டி.வி. காட்சிகளை கொண்டு இம்மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவ தினத்தன்று பாடசாலை முடிவடைந்து, ஓட்டோவில் தனது வீட்டுக்கு மாணவன் வரும் காட்சி, தொடர்மாடி குடியிருப்பில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கமெராவில் பதிவாகியிருந்தது.

தொடர்ந்து, அம்மாணவன் 5ஆவது மாடியிலுள்ள தனது வீட்டுக்குச் செல்லும் காட்சியும், அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கமெராவில் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில்,

> **குடியிருப்பின் 7வது மாடியிலிருந்து வீழ்ந்து மாணவன் உயிரிழக்கும் காட்சியும், கமெராவின் பதிவாகியுள்ளது**

குடியிருப்பின் 7வது மாடியிலிருந்து வீழ்ந்து மாணவன் உயிரிழக்கும் காட்சியும், கமெராவின் பதிவாகியுள்ளது.

இந்த மரணம், தற்கொலையா அல்லது கொலையா என்பது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன், மாணவனின் உடலில் ஐஸ் போதைப்பொருள் உள்ளமை குறித்தும் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொள்ளையர் காயம்; பிக்கு உட்பட மூவர் கைது

அவ்விடத்துக்கு பொலிஸார் சென்றதை அடுத்து, மறைந்திருந்தவர்கள் பொலிஸாரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

பொலிஸாரும் பதிலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதன்போதே, கொள்ளையர் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன், பிக்கு உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். ஏனையோர் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

அக்கரைப்பற்றில் 2021 நவம்பர் மாதம் 3 வீடுகள் உடைத்து சுமார் 30 பவுண் தாலிக் கொடிகளை கொள்ளையிட்ட சம்பவத்தின் தொடராக, டிசம்பர் 18ம் திகதி அதிகாலை 2 மணியளவில் நீதவான் ஒருவரின் வீட்டை உடைத்து 12 பவுண் தங்க ஆபரணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

> **3 வீடுகள் உடைத்து சுமார் 30 பவுண் தாலிக் கொடிகளை கொள்ளையிட்ட சம்பவத்தின் பின்னணி**

இதனை தொடர்ந்து நீதவான் வீட்டில் இடம்பெற்ற கொள்ளை மற்றும் ஏனைய கொள்ளை சம்பவங்கள் தொடர்பான கொள்ளையர்களை கைது செய்வதற்காக 4 விசேட பிரிவுகளை கொண்ட பொலிஸ் குழுவினை அமைத்து இந்த கொள்ளையர்களை பொலிஸார் வலைவீசி தேடிவந்தனர்.

அவ்வாறு இருக்கையில் கொள்ளையர்கள் பதுங்கி இருப்பதாக, கிடைத்த தகவலுக்கு அமைய, காரைதீவு வெட்டுவாய்கால் பகுதிக்குச் சென்றிருந்த போதே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.




வரும் 'Long weekend' இல்

# எச்சரிக்கை

வரவிருக்கும் வார இறுதி நீண்ட விடுமுறையில் பொதுமக்கள் நெரிசலான பகுதிகளுக்குச் செல்லும் போது, தொடர்ந்து கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தக் காலக்கட்டத்தில் கொரோன தொடர்பான சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டுமென சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த ஹேரத், பொதுமக்களுக்கு அறிவுரை விடுத்தார்.

வார இறுதி நீண்ட நாட்கள் விடுமுறையை முன்னிட்டு, பலர் மீண்டும் பயணத்தைத் ஆரம்பித்துள்ளனர். அவ்வாறு பயணங்களை மேற்கொள்வோர் நெரிசல் குறைவான இடங்களுக்குச் செல்லவும் எச்சரிக்கையாக இருக்கவும் கேட்டுக் கொண்டார்.

நாட்டில் சுமார், 15 மில்லியன் மக்கள் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்றிருந்தாலும், பலர் இன்னும் மூன்றாவது பூஸ்டர் டோஸைப் பெறவில்லை என்றும் டொக்டர் ஹேரத் சுட்டிக்காட்டினார்.

யாழ் மாவட்டச் செயலகத்தில்

# ஐ.நா அபிவிருத்தித் திட்ட பணிப்பாளருடன் சந்திப்பு

■ என்.ராஜ்



யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் Mr.Robert Juham, மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனை மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில், யாழ். மாவட்டத்தின் சமகால அபிவிருத்தி, சமூக பொருளாதார நிலைமைகள் பற்றிக் கேட்டறிந்ததுடன், மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் தற்போதுள்ள நிலைமைகள் மற்றும் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலதிக அரசாங்க அதிபர்(காணி) மற்றும் UNDP நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

தடை செய்யப்பட்ட

# மோட்டார் சைக்கிள்கள் இரண்டு சிக்கின



இலங்கை வீதிகளில் பயன்படுத்த தடை செய்யப்பட்ட அதிக திறன் வாய்ந்த 1.2 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு மோட்டார் சைக்கிள்கள், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காலி - கொழும்பு பிரதான வீதியின் ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்த 100 மோட்டார் சைக்கிள்கள் கொண்ட பேரணியில், இந்த மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் பயணித்த இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அழுத்கம நகர போக்குவரத்துப் பொலிஸ் குழுவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், களுத்துறை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மன்னாரில்

# பறவைகள் பார்வை கோபுரம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில், மன்னார் மாவட்டத்துக்கு பருவ காலங்களில் வருகை தரும் வெளிநாட்டுப் பறவைகளை பார்வையிடுவதற்கான பறவைகள் பார்வை கோபுரம், நேற்று (01) காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யு.என்.டி.பி. நிதி அனுசரணையில், 7.மில்லியன் ரூபாய் செலவில் 35 அடி உயரத்தில், மன்னார் பிரதான பாலத்துக்கும் தள்ளாடி சந்திக்கும் இடையில் உள்ள வங்காலை பறவைகள் சரணாலயம் பகுதியில் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பறவைகள் பார்வை கட்டடக் கோபுரத்தை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் மற்றும் யு.என். டி.பி யின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி றொபேர்ட் ஜுக்கம் , சுற்றுச்சூழல் அமைச்சின் சார்பாக வருகை தந்திருந்த இணைப்பாளர் சாணக்க மகேனி, பறவைகள் சரணாலயம் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.


மேலும், இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப், மன்னார் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ வனவளத் திணைக்களம் மற்றும் பறவைகள் சரணாலய திணைக்களத்தின் அதிகாரிகள், யு.என்.டி.பி அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.





உயர்தர பரீட்சை மண்டபங்களில்

# இலத்திரனியல் கடிகாரம்



■ காட்சிப்படுத்த உத்தரவு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மண்டபங்களில், இலத்திரனியல் கடிகாரத்தைக் காட்சிப்படுத்த பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்கு பணிக்கப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்தார்.

இதன்படி, பரீட்சை நிலையங்களிலுள்ள கண்காணிப்பு ஆசிரியர்கள், தமது கடிகாரத்தில், பரீட்சை நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் கடிகாரத்திலுள்ள நேரத்தை சரி செய்துக்கொள்ள வேண்டுமென அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனால் பரீட்சையின் போது, நேரம் வீணடிக்கப்பட்டதாக எவராலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உயர்தர பரீட்சைகளுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்தில், தமது புகைப்படங்களை பாடசாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி, ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அந்த உறுதிப்படுத்திய ஆவணங்களை தாம் முழுமையாக பரிசோதனைக்கு உட்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சைகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் அல்லது சந்தேகங்கள் இருக்கும் பட்சத்தில்1911, 011 2784208 அல்லது 011 2 784 537 எனும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் நேரடி தொலைபேசி இலக்கங்கள் மூலம் அது குறித்து அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலதிக வகுப்புக்களுக்கு

## நள்ளிரவு முதல் தடை



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள், எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்நிலையில், உயர்தரப் பரீட்சையை இலக்காகக் கொண்ட பயிற்சி வகுப்புக்கள் மற்றும் மேலதிக வகுப்புக்களுக்கு நேற்று (01) நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படுவதாக, பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக, துறை சார் விரிவுரையாளர்கள், கருத்தரங்குகள் மற்றும் வகுப்புக்களை நடத்துவதும், பரீட்சையை இலக்காகக் கொண்ட வினாத்தாள்களை அச்சிடுவதும், பகிர்ந்தளிப்பதும், இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்கு விதிகளை மீறுவோர் தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது பரீட்சைத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

இதேவேளை, கொவிட் தொற்றுக்கு உள்ளான மாணவர்களுக்கு வசதியாக 29 வைத்தியசாலைகளில் உயர்தரப் பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கொவிட் தொற்றுக்கு உள்ளான மாணவர்கள் இந்தப் பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ப

# தொழில்சார்ந்த கற்கைகளை ஆரம்பியுங்கள்

**பிரதமர் ஆலோசனை**



வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில், தொழில்சார்ந்த தொழிற்கல்வி கற்கைநெறிகளை ஆரம்பிக்குமாறு, தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை முன்னெடுக்கும் அரச நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில், அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொழில்முறை மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் பாடசாலையிலிருந்து விலகி, வெளிநாடு செல்லும் இளைஞர், யுவதிகளை அங்கு திறமையான தொழிலாளர்களாக பணிபுரிவதற்கு வழியேற்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

திறமையுள்ள போதிலும் பயிற்சி சான்றிதழ் அற்றவர்களுக்கு குறுகிய கால பயிற்சி மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையையும், இந்நாட்டு இளம் சமூகத்தினரையும் இணைக்கக்கூடிய ஒரு முறைமையை உருவாக்குவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவினால் தற்போது வேலைவாய்ப்புகள் உள்ள நாடுகள் மற்றும் வெற்றிடங்கள் காணப்படும் துறைகள் தொடர்பில் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இளைஞர் விவகார அமைச்சு மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சு ஆகியன ஏற்கெனவே இளைஞர், யுவதிகளுக்காக தொழில்சார் துறைகளை உள்ளடக்கும் வகையிலான வெளநாட்டு வேலைவாய்ப்புகளை இலக்காகக் கொண்ட தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு

# கொழும்பில் விசேட பாதுகாப்பு



74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொழும்பு மற்றும் மேல் மாகாணத்தை உள்ளடக்கிய வகையில், விசேட பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்காக இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினரின் உதவியுடனும் 3,000க்கும் மேற்பட்ட பாதுகாப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பெப்ரவரி மாதம் 04ஆம் திகதியன்று மேல் மாகாணத்தில் 21 வீதிகளின் போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அந்த வீதிகளுக்குரிய மாற்றுப் வீதிகளைப் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, சுதந்திர தின வைபவத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் பிரதம அதிதிகள் உள்ளிட்ட அனைவரும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிட அட்டையுடன காலை 7.30 மணிக்கு முன்னதாக வருகை தருமாறு கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், வைபவத்துக்கான அணிவகுப்பு ஒத்திகை, நாளை 03ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்

**அற்றோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்தில் மீகொட, மாதுலாவ தெற்கு, இல. 1/21/2/11, ல் வசிக்கும் கல்ஹேனகே அனுஷா குமுதினி பெரேரா ஆகிய நான் இலங்கை வாழ் பொது மக்களுக்கு தெரியப்படுத்துவது யாதெனில் 2017.05.03 ஆம் திகதி என்னால் கையொப்பம் இடப்பட்ட மற்றும் கொழும்பிலுள்ள பிரசித்த நொத்தாரிசு தொனநுவணி தாரிகா உதயவன்ஷ அப்புஹாரச்சி அவர்களாள் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 2 மற்றும் 2017.06.01 ஆம் திகதி இலக்கம் 8092 என்ற தினக்குறிப்பேட்டின் கீழ் இலக்கம் 103 ஆம் அத்தியாயத்தில் பதிவுசெய்யப்பட்டதுமான மீகொட, மாதுலாவ தெற்கு, இல. 1/21/2/11, ல் வசிக்கும் ஹேவா பிரம்மனகே சுசாம் துமிந்த ஜயசிங்ஹ என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அடோர்னி தத்துவ அதிகாரத்தை 2021.12.12 ஆம் திகதி முதல் இல்லாதொழித்து இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனை இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை

# கடுமையானதாக இருக்கும்



எஸ்.நிதர்ஷன்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை, இம்முறை கடுமையானதாக இருக்கும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருடனான நேற்றைய (01) சந்திப்புக்குப் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியல் விடயங்கள், உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பில் பேசியுள்ளோம். 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்ற தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கை சம்பந்தமாகவும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக, நேர்மாறாக நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பிலும் பேசியுள்ளோம்.

"இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும்போது, இலங்கை கடற்படை அதைத் தடுக்காமல் அலட்சியமாக செயற்படுவது தொடர்பாகவும் தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண்களுக்கு வரும் மோசமான பழி வாங்கல் சம்பந்தமாகவும் எடுத்துரைத்துள்ளோம். தென்னிலங்கை சூழல் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள், உரிமை மீறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் அவருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

"அமைதியாக அனைத்தையும் உள்வாங்கிய அம்மையாரிடம் கடந்த அறிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தோம்.

அரசாங்கம் புதிதாக ஆட்சிக்கு வந்ததால், அவர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்க வேண்டும் எனக் கூறினார். ஆனால், இந்த முறை அறிக்கை கடுமையானதாக இருக்கும் எனவும் அவர் கூறினார்" என்றார்.



## ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாடு

வெளிவிவகார அமைச்சர் விளக்கம்

என்.ராஜ்

உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நடந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

வடக்கில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலாளர் தலைமையில், மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, ஜெனீவா கூட்டத் தொடரில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது, அதிக பிரச்சினைகள் உள்ள நாடாக இலங்கை இல்லை. அத்தோடு, ஏற்கெனவே நடந்த பிரச்சினைக்காக நேரத்தையும் வீணடிக்கத் தேவையில்லை.

தற்போது கொரோனா வைரஸுக்கு நாம் முகம் கொடுப்பதால், பல மில்லியன் கணக்கில் பணத்தை செலவழித்துள்ளோம். அதாவது, தடுப்பூசி மற்றும் ஏனைய சுகாதார செயற்பாடுகளை முன்னெடுத்து, எமது நாட்டை கொரோனாவில் இருந்து பாதுகாப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். கொரோனா நிலைமை தொடர்பிலேயே தற்போது அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

"தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பவற்றை நிலைநாட்டி, உள்நாட்டு பொறிமுறை ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் தீர்வு வழங்குவதை எதிர்பார்க்கின்றோம். இந்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிகவும் உறுதியாகவுள்ளார். அதைச் செயற்படுத்த பல்வேறுபட்ட முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

கிளிநொச்சியில்

## நான்கு நாள்களில் 200 தொற்றாளர்கள்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மாவட்ட தொற்று நோயியலாளர் வைத்தியர் நிமால்அருமைநாதன் தெரிவித்தார்.

கடந்த நான்கு நாள்களில் மாத்திரம் சுயமாக முன்வந்து தங்களைப் பரிசோதனை செய்தவர்களில் 200 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

இவர்களில் 50 பேர் மாணவர்களாகக் காணப்படுவதோடு, 16 வயதுக்குட்பட்டவர்கள் 43 பேரும் உள்ளடங்குகின்றனர். அத்தோடு, கர்ப்பிணித் தாய்மார்கள் இருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

தற்போது கொரோனா தொற்றுப் பரவும் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றமையால், பொதுமக்கள் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டும். முதலாம், இரண்டாம் தடுப்பூசிகளையும் பூஸ்டர் தடுப்பூசியையும் செலுத்தாதவர்கள் அவற்றை உடனடியாக செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட தொற்று நோயியலாளர் வைத்தியர் கேட்டுள்ளார்.

வவுனியா அபிவிருத்திக் கூட்டத்துக்கு

## ஊடகவியலாளருக்கு அனுமதியில்லை

க. அகரன்

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் நலன் சார்ந்து முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமானது, வட மாகாண ஆளுனர் ஜீவன் தியாகராசா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான கு .திலீபன் ஆகியோரின் இணைத் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்று முன்தினம் (31) காலை முதல் பிற்பகல் 2.15 வரை இடம்பெற்றது.

இதில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளருக்கு கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அதன் பின்னர் உள்ளே செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

குறித்த அறிவிப்பானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமாரால் தெரிவிக்கப்பட்டதாக மாவட்ட செயலக தகவல்



தொடர்பாடல் உத்தியோகத்தர் உப்புல் பாலசூரிய ஊடாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் பேசப்படும் போது, அதன் உண்மைத் தன்மை மற்றும் அதன் நிலைமைகள் தொடர்பிலும், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் நிலைப்பாடு தொடர்பிலும் மக்கள் அறிந்து இருக்க வேண்டியது ஒரு ஜனநாயக உரிமை என்பதுடன், அது தொடர்பில் மக்களுக்கு கருத்துகளை கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பும் ஊடகங்களுக்கு இருக்கின்றது.

இந்த நிலையில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கும், தகவல் வெளியிடும் உரிமைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொண்டமை குறித்தும் ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சி மீனவர்களின்

## போராட்டம் இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது

எஸ்.நிதர்ஷன், எஸ். தில்லைநாதன்

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து வடமராட்சி, பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் இரண்டாவது நாளாகவும் நேற்று (01) போராட்டம் இடம்பெற்றது.

வீதியில் கூடாரங்களை அமைத்து படகுகள், வலைகளை வைத்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த வீதி ஊடான போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பித்தன.

வடமராட்சி கிழக்கிலிருந்து வியாழக்கிழமை (27) கடற்றொழிலுக்கு சென்ற இருவர் காணாமல் போயிருந்த நிலையில், நேற்று முன்தினம் (31) ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த இரு மீனவர்களும் சென்ற படகை, இந்திய ரோலர் படகுகள் மோதி விபத்துக்குள்ளாக்கி இருக்கலாம் எனக் குற்றம் சாட்டியே, மீனவர்கள் இந்தத் தொடர் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இப்போராட்டம் இடம்பெற்ற இடத்தில் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



சிரேஷ்ட பிரஜைகளுக்கு

# முன்னுரிமை கொடுக்கவும்

அஸ்ஹர் இப்றாஹீம்

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக சமூகம் தரும்போது, சேவை நிலையங்களில் முன்னுரிமை வழங்கி, அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு, சாய்ந்தமருது ஒய்வூதியர் சங்கம் கேட்டுள்ளது.

தமது வாழ்நாளில் பலவிதமான திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் சேவையாற்றி தற்போது வயதாகி ஓய்வான நிலையில், தமக்கேற்படும்



தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இந்நிலையில், அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், தபாலகம், வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள், நூலகம், மின்சார சபை, வங்கி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றுக்கு வருகை தரும் போது, நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியிருப்பதால் பலவிதமான கஷ்டங்களை அவர்கள் எதிர்நோக்கக வேண்டியுள்ளது.

இதனால் முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மதிப்பளித்து, அவர்களின் தேவைகளை உரிய நேரத்துக்கு நிறைவேற்றிக் கொடுக்க திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், சில சேவை நிலையங்களில் சிரேஷ்ட பிரஜைகளுக்கென தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஒய்வுதியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



## சுதந்திர மரநடுகை

எம்.எஸ்.எம்.நூர்தீன்

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சிரமதானமும் மரநடுகை வைபவமும், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதரின் வழிகாட்டலில் நேற்று (01) நடைபெற்றன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக இந்தச் சிரமதானமும் மரநடுகை வைபவமும் முன்னெடுக்கப்பட்டன.

புதிய காத்தான்குடி தெற்கு 167சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெற்ற மரநடுகை நிகழ்வில், காத்தான்குடி பிரதேச செயலக உதவி மாவட்ட பதிவாளர் கிருஸ்ணப்பிரியன், பிரிவு கிராம உத்தியோகத்தர் திருமதி ஏ.எல்.பாத்திமா ஸம்ஹா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ரசூல்ஸா, பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஹம்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நூர்தீன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி ஏம்.பி.எப்.ரிப்கா, திருமதி ஏ.சர்மிளா, பொலிஸ் உத்தியோகத்தர் தவராசா உட்பட பிரிவு மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், சிவில் பாதுகாப்புக்குழு அங்கத்தவர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக

## 14ஆவது பொது பட்டமளிப்பு விழா

எம்.எஸ்.எம். ஹனீபா

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான 14ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் திங்கட்கிழமை (07) முதல் வியாழக்கிழமை (10) வரை பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பட்டமளிப்பு தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு, பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நேற்று (01) நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "இப்பட்டமளிப்பு விழா, எட்டு அமர்வுகளாக நடைபெற உள்ளதுடன், மொத்தமாக 2,621 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

07ஆம் திகதி முதலாவது அமர்வில் பிரயோக விஞ்ஞானம், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 475 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாவது, மூன்றாவது அமர்வில் கலை, கலாசார பீடத்தைச் சேர்ந்த 567 மாணவர்களும், நான்காவது,



> எட்டு அமர்வுகளாக நடைபெற உள்ளதுடன், மொத்தமாக 2,621 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்

ஐந்தாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 642 மாணவர்களும் தமது பட்டங்களை பெறவுள்ளனர்.

ஆறாவது, ஏழாவது அமர்வில் முகாமைத்துவம், வர்த்தக பீடங்களைச் சேர்ந்த 625 மாணவர்களும், எட்டாவது அமர்வில் கலை, கலாசார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வியாபார நிருவாக முதுமாணிப் பட்டங்களை 23 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டங்களை 02 பேரும், 04 பேர் முது தத்துவமாணி பட்டங்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கூறினார்.

கல்முனை மாநகர சபை

## உறுப்பினர் ஷிபான் இராஜினாமா

நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான், ஏ.எல்.எம்.ஷினாஸ், எம்.என்.எம்.அப்ராஸ், றாஸிக் நபாயிஸ்

தன்னுடைய மாநகர சபை உறுப்பினர் பதவியை இன்று முதல் இராஜினாமா செய்வதாக கல்முனை மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் பீ.எம். ஷிபான் அறிவித்துள்ளார்.

தனது இல்லத்தில் நேற்று முன்தினம் (31) இரவு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "தலைவரை கொழும்பில் வைத்து நேரடியாக சந்தித்து, பல்வேறு விடயங்களை



கலந்துரையாடினேன். அவரின் ஆலோசனைக்கு இணங்க, எனது உறுப்புரிமையை இராஜினாமா செய்து, அடுத்ததாக பதவியில் அமர்த்தப்பட இருக்கின்ற ஒருவருக்கு வழங்கவுள்ளேன்.

"மருதமுனையில் கட்சி கடைப்பிடித்துவரும் கொள்கைக்கு நானும் எனது பூரண பங்களிப்பை வழங்கி விடைபெறுகின்றேன். என்னுடைய மாநகர சபை உறுப்புரிமையை இராஜினாமா செய்தாலும் கூட, அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் தொடர்ந்தும் வலுவான முறையில் பயணிப்பேன்" என்றார்.

இந்த ஊடக சந்திப்பில், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் நெய்னா முஹம்மத், ஷிபானின் இடத்தை நிரப்பவுள்ளவராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஒய்வு பெற்ற கிராம அலுவலர் ஏ.எச்.ஏ. ழாஹிர் உட்பட, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பாலப் புனரமைப்புக்கு

## 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு


அஸ்லம் எஸ்.மௌலானா

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். வீதியில் இருந்து தோணாவை ஊடறுத்துச் செல்லும் பாலத்தை புனரமைப்புச் செய்வதற்கு, கல்முனை மாநகர சபையின் பரிந்துரையில், கிழக்கு மாகாண சபையின் எல்.டி.எஸ்.பி. திட்டத்தின் கீழ், சுமார் 53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்புனரமைப்பு வேலைத் திட்டம், நாளை (03) அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர், ஆணையாளர் எம்.சி.அன்சார், எல்.டி.எஸ்.பி. திட்டத்தின் அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.





### இராகலை பொதுச் சுகாதார பிரிவில்

# சுற்றுகிறது கொரோனா

■ ஆ.ரமேஸ்.

நுவரெலியா, இராகலை பொதுச் சுகாதார பிரிவுக்கு உட்பட்ட லிடேஸ்டேல்,சென் லெணாட்ஸ், இராகலை, டெல்மார் தோட்டங்களில் ஆறு பேருக்கு நேற்றுமுன்தினம் (31) மாலை கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, "இராகலை நகரில் இயங்கும் வங்கிக் கிளையொன்றின் பெண் உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட ஏழு பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதையடுத்து அவர்கள், தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்" என, இராகலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு அதிகாரி எஸ்.கோபிராஜ் தெரிவித்தார்.

இராகலை, லிடேஸ்டேல், சென்லெனாட்ஸ் ஆகிய தோட்டங்களில் பணியாற்றும் உதவி தோட்ட அதிகாரிகளில் இருவரென நால்வரும், இராகலை தோட்டத்தில் பணியாற்றும் உதவி தோட்ட அதிகாரி என ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என பொதுச் சுகாதார பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

அதேநேரத்தில், தொற்றுக்குள்ளான ஏழு பேரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பத்தாரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், தொற்றுக்குள்ளானவர்கள் பயணித்த இடங்கள் தொடர்பில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பரிசோதித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அதிகாரி, இராகலை பிரதேசத்தில் கொரோனா தொற்று தொடர்பில் அவதானத்துடன் பொதுமக்கள் செயற்படுவதுடன், சுகாதார வழிமுறைகளை முறையாகக் கடைப்பிடித்து, பொதுச் சுகாதார பிரிவினரின் அறிவிப்புகளுக்கு மதிப்பளித்து, ஒத்துழைப்பு நல்குமாறும் பொதுச் சுகாதார பிரிவு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## உக்குவளையில் சுதந்திர தின நிகழ்வுகள்

■ ஏ.எம்.ஜலீல்

உக்குவளை பிரதேச சபையும் உக்குளை பிரதேச செயலகமும் பிரதேச உலமாக்களும் இணைந்து, இலங்கையின் 74ஆவது சுதந்திர தினமான, பெப்ரவரி 4ஆம் திகதியன்று, உக்குவளை வரக்காமுர அன்னூர் முஸ்லிம் மகாவித்தியாலய விளையாட்டரங்கில் சுதந்திர தின நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

அன்றையதினம் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள் தேசிய கொடியை ஏந்தியவண்ணம், உக்குவளை, எல்வல பிரதான சந்தியிலிருந்து குறிப்பிட்ட மைதானத்துக்கு வாகனப் பேரணிகள் மூலம் சென்றடைவர்.

இந்நிகழ்வில் பிரதேச மூவின மதத்தலைவர்கள், பிரமுகர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், அபிமானிகள் கலந்துகொள்வதுடன் அவர்களது சிறப்புரைகளோடு இந்நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பாடுபட்டவர்கள், இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்துதல், சமாதானத்தைக் குறிக்கும் வகையில் பிரமுகர்களால் புறாக்களைப் பறக்கவிடுதல், மரநடுகையும் இடம்பெறவிருக்கின்றது.

மூவினங்களின் கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன், உக்குவளை பிரதேசத்தில் கலாபூஷணம் விருது பெற்ற பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த இருவரும் முஸ்லிம் ஒருவரும் கௌரவிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### கைகோர்த்துக் காப்பாற்ற முயன்றபோது மரணித்த

## ஐவரில் ஒருவருக்கு கொரோனா

■ எம்.செல்வராஜா



உமாஓய ஆற்றில் நீராடச்சென்று, நீரில் மூழ்கி பலியானவர்கள் ஐவரில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியானது.

அவரின் சடலத்தை தவிர, ஏனைய நால்வரின் சடலங்களும் நிபந்தனைகளின் கீழ், அவரவர்களின் குடும்பத்தினரிடம் பதுளை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைத்து நேற்று (01) ஒப்படைக்கப்பட்டன.

கொவிட்-19 தொற்று உறுதியான செல்வகுமார் சகிப்பிரியா (வயது 22) என்பவரின் சடலம், சுகாதார வழிமுறைக்கமைய நேற்று (01) தகனம் செய்யப்பட்டுள்ளது.

செல்வகுமார் சசிப்பிரியாவை மீட்ட பொலிஸார், இராணுவத்தினர், கடற் படையினர், சசிப்பிரியாவின் பெற்றோர் சகோதரர்கள் உள்ளிட்ட 16 பேர் நேற்று (01) முதல் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் என்று பதுளை சட்ட வைத்திய அதிகாரி டொக்டர் ருக்சிந்து நதீர கூறினார்.

இதேவேளை, செல்வகுமார் சசிப்பிரியாவின் சடலத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இன்னும் சிலர், அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளனர்.

பதுளை, அட்டாம்பிட்டிய பெருந்தோட்ட முதலாம் பிரிவில் அண்மையில் மரணமான ஜெயராமின் ஆத்மசாந்தி கிரியைகளில் கலந்துகொண்டவர்களில் ஐவரே, ஜனவரி 29ஆம் திகதி உமா ஒய ஆற்றில் நீரில் மூழ்கி பலியானவர்களாவர்.

ஆணொருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டார். அவரைக் காப்பாற்றுவதற்காக, ஒவ்வொருவரும் கைகளைக் கோர்த்துக்கொண்டு ஆற்றில் இறங்கியுள்ளனர். இதன்போதே, இவ்விபரீதம் ஏற்பட்டுள்ளது.







## பசறையில் ஆர்ப்பாட்டம்

தோட்டக்காணியை பசறை பிரதேச செயலகம் ஊடாக சுவீகரிப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பசறை- கோணக்கலை பசறை டிவிஷன் தோட்டத் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லாமல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதோடு நேற்று (01) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

தோட்டக் காணியை சுவீகரிக்க எடுக்கும் முயற்சியை கைவிடாவிடின், கோணக்கலை அனைத்து தோட்டங்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் எச்சரித்தனர்.

ராமு தனராஜ்

## பழக்கன்று பகிர்ந்தளிப்பு



■ சிவாணி ஸ்ரீ

வரலாற்று பிரசித்திப் பெற்ற பலாங்கொடை கூரகல ரஜமா விஹாரையின் விஹாராதிபதி வணக்கத்திற்குரிய வதுரகும்புரே தம்மரத்ன தேரரின் எண்ணக்கருவுக்கு அமைய பழக் கன்றுகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கூரகல ரஜமா விஹாரை வளாகத்தில், கடந்த 29ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது கூரகல ரஜமா விஹாரையின் விஹாராதிபதி வணக்கத்திற்குரிய வதுரகும்புரே தம்மரத்ன தேரர், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கு பழக் கன்றுகளை வழங்குவதையும், இந்நிகழ்வில் மத குருமார்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.











## விசேட அபிஷேக ஆராதனை

காவத்தை அவுப்பை தலுகலை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் கருவறை விமான விக்கிரக பிரதிஷ்டா, கருவறை பிரதான வாயில் பிரதிஷ்டா, அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனை மற்றும் பால்குட பவனி என்பன நேற்று முன்தினம்(30) வெF சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி ஆலய நிர்வாக சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பூஜை நிகழ்வுகள் அனைத்தும் யாழ்ப்பாணம் கோண்டாவில் ஸ்ரீ தேவி பூஜா துரந்தரர் சிவஸ்ரீ சுரேஷ் குமார குருக்கள் தலைமையில் இடம்பெற்றன.

மேற்படி ஆலயத்தின் புனர்நிர்மாண பணிகள் சிற்பாச்சாரியார் சைவத்திரு சேது நடராஜன் சித்தராஜன் தலைமையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சிவாணி ஸ்ரீ )

## தந்தை படுகொலை; மகன் கைது

■ சுமணசிறி குணதிலக

செங்கல் அடுப்புக்கு அருகில், செங்கற்களுக்கு மேலே விழுந்து மரணித்துவிட்டார் எனக்கூறி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், ஒரு பிள்ளையின் தந்தை (வயது 48) மரணமடைந்துள்ளார்.

இதுதொடர்பில் வெல்லவாய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அது படுகொலையென கண்டறியப்பட்டது. அதன்பின்னர், மரணமடைந்தவரின் மகன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உழுந்து அறுவடைக்குச் செல்வதற்கு புறப்பட்ட தந்தை, சற்றுநேரத்துக்குப் பின்னர், அறுவடைக்கு வருமாறு மகனுக்கு அறிவுறுத்தியுள்ளார். எனினும், மாலையாகியும் மகன் வருகைதரவில்லை. ஏன் வரவில்லையென கேட்டதற்கு இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அந்த வாக்குவாதம் முற்றிப்போகவே, தந்தையை மகன் கத்தியால் வெட்டியுள்ளார். இதன்போது தந்தையின் இரண்டு விரல்களில் காயம் ஏற்பட்டுள்ளது. அதன்பின்னர், அங்கிருந்த செங்கல்லை எடுத்து, தந்தையின் நெஞ்சில் தாக்கியதையடுத்து தந்தை மரணித்துள்ளார்.

## தடுப்பூசி தாமதத்தால் பலரும் தடுமாற்றம்

■ சுதத் எச்.எம்.ஹேரத்



ஹட்டன்- டிக்கோயா நகரசபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில், 20 வயதுக்கு கீழ்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசியின் மூன்றாவது தடுப்பூசியான பைஸர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று (01) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஒரு மணிநேரம் தாமதமடைந்தமையால், அங்கு சற்று பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்காக வந்திருந்தவர்கள், பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

'பூஸ்டர் தடுப்பூசி முதலாம் திகதி காலை 8.30 மணி செலுத்தப்படும்' என பிரசாரம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து பெருந்திரளானவர்கள், தடுப்பூசி செலுத்தப்படும் நிலையத்தை நோக்கிப் படையெடுத்திருந்தனர். எனினும், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை காலை 10 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டது. இதனால், தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்கு வந்திருந்தோர் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

காலை 7.30 மணியிலிருந்து சிலர் கால்கடுக்க காத்திருந்துள்ளனர். அவ்வாறானவர்கள் வெயிலின் சூட்டை தாங்கிக்கொள்ள முடியாது இடைநடுவிலேயே சென்றுவிட்டனர்.

## தேசிய கொடிகள் விற்பனை சூடுபிடிப்பு

■ சுதத் எச்.எம்.ஹேரத்



இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினம், எதிர்வரும் 4ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. அந்தச் சுதந்திரத் தினத்தை கொண்டாடுவதற்காக, ஹட்டன் பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான தேசிய கொடிகள், ஹட்டன் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

பல்வேறான அளவுகளில், தேசிய கொடிகள் விற்பனைக்காக தொங்கவிடப்பட்டுள்ளன.

## உபகரணங்கள் வழங்கிவைப்பு

■ டி சந்ரு





நுவரெலியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுயதொழிலை மேற்கொள்ளும் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

சாஸ்பான், கிருமிநாசினி தெளிக்கும் இயந்திரம், சீலர் (sellar), நீர்பம்பி, ஆடுவளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கில் ஆடுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்கியா தொலைநோக்கு' வேலைத்திட்டத்தின் கீழ், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாக, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரனின் வழிகாட்டலின் பெயரிலேயே இவை வழங்கிவைக்கப்பட்டன.

இவ்வைபவத்தில், நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ், கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாந்த், தலவாக்கலை- லிந்துலை நகர சபை தவிசாளர் பாரதிதாசன், அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் கதிர்செல்வன், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

**"நுவரெலியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுயதொழிலை மேற்கொள்ளும் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு சாஸ்பான், கிருமிநாசினி தெளிக்கும் இயந்திரம், சீலர், நீர்பம்பி, ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன**

# மாணவர் சமுதாயத்துக்குள் இலகுவாக நுழைந்துகொண்ட 'ஐஸ்'

நமது நாட்டைப் பொறுத்தவரையிலும் நாலாபுறங்களும் கடலால் சூழ்ந்திருப்பதால், சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, ஒரு மையமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதனால்தான், கடற்கண்காணிப்பில் ஆகக்கூடுதலான கரிசனையை காண்பிக்க வேண்டியுள்ளது.

சர்வதேச போதைப்பொருள் வர்த்தகமும் எமது நாட்டை ஒரு கேந்திரமாகப் பயன்படுத்துவதை, அண்மைக் காலங்களில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் எண்ணிக்கையைப் பார்க்குமிடத்து தெட்டத்தெளிவாகின்றது. கடலால் சூழ்ந்து, மிதந்து கொண்டிருக்கும் நாடெனக் கூறுவதற்கு முன்பதாக, போதையால் மிதக்கும் நாடெனக் கூறினால் தப்பேதுமில்லை!

பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மேலிருந்து, கீழே விழுந்த 15 வயதான மாணவன், 'ஐஸ்' போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது பிரேத பரிசோதனைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஆக, மாணவர் சமூகத்தைச் சீர்குலைக்கும் வகையில், போதைப்பொருள் விநியோகம் மிகநாசுக்காக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில், பெற்றோரும் அக்கம் பக்கத்தினரும் நண்பர்களும் மிகக் கவனமாக இருக்கவேண்டும். போதைப்பொட்களைப் பயன்படுத்தி, அடிமையாக்க செய்யும் வர்த்தகர்களின் வலைக்குள், தங்களுடைய பிள்ளைகள் மட்டுமன்றி, ஏனைய பிள்ளைகளும் விழுந்துவிடக்கூடாது என்பதில் விழிப்பாக இருக்கவே வேண்டும்.

வாழவேண்டும் என்பதற்கு அப்பால், சமூகத்தைப் போதைக்குள் தள்ளாடவிட்டு, முதலையைப் போல ஒரே வாயில் கௌவிக்கொள்ள நினைக்கும் சமூக விரோதக் கூட்டங்களை, இனங்கண்டு கொள்வது முக்கியமானது. அதனூடாகவே, போதைக்குள் விழுந்துவிடாது சமூகத்தைக் காப்பாற்ற முடியும்.

போதைப்பொருளை, ஒரு தடவையாவது பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் பெருந்தொகையைச் செலவழித்து, கொள்வனவு செய்யவேண்டும். முதலிரண்டு நாள்களில் இலவசமாக வழங்கப்பட்டு, போதையேற்றியதன் பின்னர், பணத்துக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அறியமுடிகின்றது. போதையில் மிதக்கப் பழக்கப்பட்டவர்களுக்கு, அப்போதைப்பொருள் கட்டாயமாக ஒவ்வொரு நாளும் தேவைப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், திருட்டு, கொலை, கொள்ளை, அபகரிப்பு உள்ளிட்ட குற்றச் செயல்களிலும் அவ்வாறானவர்கள் ஈடுபடுவார்கள், பெறுமதியான எவையும் கிடைக்காவிடின், படுகொலை செய்து அபகரித்துச் செல்லமுயல்வர்.

போதைப்பொருள் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டவர்களில் பலர், கொலைகளில் ஈடுபடுகின்றமையும் நாளாந்த செய்திகளாகின்றன. அவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, மாணவர் சமுதாயத்தைக் காப்பாற்றவேண்டியது ஒவ்வொருவருடையதும் பொறுப்பாகும்.

நகர்ப்புறங்களிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் விலையுயர்ந்த போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படும் அதேநேரங்களில், கிராமப்புறங்களிலும் தோட்டப்புறங்களிலும் கஞ்சா, கேரள கஞ்சா உள்ளிட்டவை பயன்படுத்தப்படுகின்றன.

நகர்புறங்களில் இருந்து சொந்த ஊர்களுக்குச் செல்லும் ஒருசிலர், இவ்வாறான மோசமான பழக்கவழக்கத்தை அங்கும் விதைத்துவிட்டு வந்துவிடுகின்றனர். நல்லது தொற்றிக்கொள்ளும் வேகத்தை விடவும் தீய பழக்கங்கள் எளிதாக பற்றிக் கொள்கிறது. ஆகையால், மாணவர் சமுதாயத்தை மீட்டெடுக்கவும் காப்பாற்றவும், நாம் அனைவரும் முன்வரவேண்டியது காலத்தின் தேவையாகும்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கருமிகள் எனத் தெரிந்தும், பொதுநல சேவையாளர்கள் அவர்களிடம் உதவிகளைக் கோருவது பிரயோசனமற்றது. இத்தகைய நபர்கள், தங்களை ஏமாற்றுவது தெரிந்தும், அவர்கள் சொன்ன பொய்களை நம்பி, நன்கொடைகளைக் கேட்பது அர்த்தமற்றது.

சமூகத்தில் பலதரப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். கேட்காமலே கொடை வழங்குபவர்கள்; செய்த உதவிகளை சொல்லிக்கொண்டே இருப்பவர்கள்; ஏழ்மையில் உள்ளவர்கள்; உடல் உழைப்பின் மூலம் சேவைகளைச் செய்பவர்கள் எனப் பல வர்க்கத்தினர் உள்ளனர். மக்கள் சேவையாளர்கள் எதையும் பொருட்படுத்தாமல், தங்கள் கடமைகளைத் தொடர்வார்கள்.

வழங்குவதுபோல் சந்தோஷம் வேறெதுவும் கிடையாது. ஆண்டவன் தர்மவான்களைக் கைவிடுவதில்லை. வசதியுள்ளபோது வழங்குவதே சிறப்பானது. கொடுப்பவர்களுக்கு செல்வம் வற்றாத நதிபோல் சுரந்துகொண்டே இருக்கும்.

எல்லோரும் நிறைவாக வாழ்வதை இரசித்து மகிழ்வதே, அவர்களின் பரந்த இதயங்களைக் காட்டுகின்றன. எமக்கான பெரும்பேறு, பிறரின் கஷ்டங்களை இயன்ற அளவுக்கு நிவர்த்தி செய்வதாகும். பரந்த மனமே, இனிய வாழ்வை அமைக்கும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

ஜெனீவாவை

# எவ்வளவு காலம் நம்பியிருப்பது?



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மற்றோர் அமர்வு வருகிறது. இம்மாதம் இறுதிப் பகுதியிலிருந்து, சுமார் ஒரு மாத காலமாக அது நடைபெறும்.

இந்த நிலையில், அரசாங்கமும் தமிழ் அரசியல் கட்சிகளும் அதற்குத் தயாராகி வருகின்றன. இது, அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புக்கும் இடையிலான போர் முடிவடைந்தது முதல், நடைபெற்று வரும் ஒரு நிகழ்வாகும்.

போரின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்றும் அதற்காக, மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழ் தரப்பினர் அப்பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தொடருக்கு முன்னரும் வலியுறுத்தி வருகின்றனர். அரச தரப்பினர், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஏதாவது செய்து காலத்தைக் கடத்தி வருகின்றனர். இவ்வாறே, 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

மனித உரிமைகள் பேரவை, ஒவ்வொரு வருடமும் போர்க்கால மற்றும் அதற்குப் பின்னரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையில் ஏதாவது செய்கிறது. இலங்கை அரசாங்கமும் அப்போது ஏதாவது கூறி, காலத்தை கடத்த அவகாசத்தைப் பெற்றுக் கொள்கிறது.

இது, கடந்த ஒரு தசாப்த காலமாக நடைபெற்று வந்த போதிலும், பிரச்சினை தீர்ந்ததாகத் தெரியவில்லை. மனித உரிமைகள் பேரவையும் இந்தப் பிரச்சினையை பாரதூரமாகக் கணக்கில் எடுத்துள்ளதா என்ற சந்தேகமும் எழுகிறது.

உதாரணமாக, சில அண்மைக்கால சம்பவங்களைச் சுட்டிக் காட்டலாம். 2014ஆம் ஆண்டு, மனித உரிமைகள் பேரவை, போர்க் காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று இருக்கின்றனவா என பொதுவானதொரு விசாரணையை நடத்தியது. பின்னர், போரில் ஈடுபட்ட இருசாராரும், மனித உரிமைகளை மீறியுள்ளனர் என அறிக்கை ஒன்றில் மூலம், 2015ஆம் ஆண்டு தெரிவித்தது.

அதன்பின்னர், 2019ஆம் ஆண்டு வரை, மனித உரிமைகள் பேரவை முக்கிய நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக எவருக்காவது எதிராக சாட்சியங்கள் இருந்தால், ஐ.நாவின் உறுப்பு நாடுகள் அவருக்கு எதிராக, தத்தமது நாடுகளிலேயே வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என, மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் 2019ஆம் ஆண்டு, தமது அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார். ஆனால், மனித உரிமைகள் பேரவையால் அந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரரணையில், அது குறிப்பிடப்படவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், 2021ஆம் ஆண்டு, அதாவது கடந்த ஆண்டே அந்த விடயம், பேரவையில் பிரேரணையாக நிறைவேற்றப்பட்டது. அந்தப் பிரேரணை மூலம், இலங்கையில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக, தத்தமது நாடுகளிலேயே வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறிய மனித உரிமைகள் பேரவை, அந்த வழக்குகளுக்காக ஆதாரங்களைத் திரட்டுவதற்காக ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்தியது. அந்தப் பொறிமுறைக்காக நிதியையும் ஒதுக்கியது.

ஆனால், அதன் பின்னர் அந்தப் பொறிமுறை இருக்கிறதா, இயங்குகிறதா என்பதே தெரியாமல் போய்விட்டது. இது, இலங்கையில் மனித உரிமை விடயத்தில், மனித உரிமைகள் பேரவை எந்தளவு அக்கறை செலுத்துகிறது என்பதைக் காட்டுகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், 2020 மார்ச் மாதத்திலேயே முதலாவதாக மனித உரிமைகள் பேரவை கூடியது. அப்போது, வெளிநாட்டமைச்சராக இருந்த தினேஷ் குணவர்தன, மனித உரிமை விடயத்தில் நீதி வழங்குவதற்காக, அந்த விடயம் தொடர்பாக இதுவரை நியமிக்கப்பட்ட குழுக்கள், ஆணைக்குழுக்கள் ஆகியவற்றின் அறிக்கைகளை ஆராந்து, அவற்றில் எந்தெந்தப் பரிந்துரைகளை அமலாக்கலாம் என்பதைப் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காக, உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் என அக்கூட்டத்தில் கூறினார்.

ஆனால், ஒரு வருடம் செல்லும் வரையிலும் ஜனாதிபதி அவ்வாறானதொரு குழுவை நியமிக்கவில்லை. கடந்த வருட மனித உரிமைகள் கூட்டத் தொடர் நெருங்கி வந்த நிலையில், கடந்த வருடம் ஜனவரி மாதத்திலேயே அவர் அதற்கு நடவடிக்கை எடுத்தார். அதன் பிரகாரம், உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில், மூவர் அடங்கிய ஆணைக்குழுவை நியமித்தார். அக்குழு ஆறு மாதங்களில் தமது அறிக்கையை, ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இப்போது, அந்த ஆணைக்குழுவுக்கு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்ட நிலையில், அடுத்த ஜெனீவா அமர்வும் வந்துவிட்டது. இந்த விடயத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன என்பதை, அரசாங்கம் அறிவிக்கவில்லை. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்துக்குச் சென்று, வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் என்ன தான் கூறப் போகிறாரோ தெரியாது?

இது, மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். ஏனெனில், போர்க் கால மனித உரிமைகள் மீறல்களை விசாரணை செய்ய, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே, மனித உரிமைகள் பேரவையின் வலியுறுத்தலாகும். அதனை அரசாங்கம் செய்யாதமையாலேயே, பேரவை 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை விடயத்தில் எட்டு பிரேரணைகளை நிறைவேற்றி இருக்கிறது. அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே, அரசாங்கம் இந்த ஆணைக்குழுவை நியமித்தது.

அதற்கான ஆலோசனையை, அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்தும் இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டன. இந்த விடயத்தில், ஆணைக்குழுவுக்கு பெரிதாக எதுவும் செய்வதற்கும் இல்லை. முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வாசித்து, பரிந்துரைகளில் எவை அமலாக்கப்பட்டுள்ளன, எவை அமலாக்கப்படவில்லை என்பதைப் பிரித்து அறிவது மட்டுமே, அதன் கடமையாக இருக்கிறது. அதில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டு இருந்தால், தாமதம் ஏற்படலாம். அவ்வாறு எதுவும் தெரிய வரவும் இல்லை.

அந்தப் பணி பூர்த்தியடையாவிட்டாலும், மனித உரிமைகள் பேரவையை கருத்திற்கொண்டு, அரசாங்கம் வேறு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அண்மையில், நீதி அமைச்சர் வடக்கில் ஆரம்பித்த தமது அமைச்சின் நடமாடும் சேவை, அதில் ஓர் அம்சமாகும். இது, தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதற்கு மேற்கொண்ட முயற்சியைப் பார்க்கிலும், சர்வதேச சமூகத்துக்கு ஒரு செய்தியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது என்பது, வெளிநாட்டு அமைச்சர் அதில் கலந்து கொண்டதன் மூலம் தெரிகிறது.

அத்தோடு, மனித உரிமை உயர் ஸ்தானிகரின் கடந்த அறிக்கையில், பெயர் குறிப்பிடப்பட்டு இருந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு இருந்த கவிஞர் அஹ்னாப் ஜஸீம்மை பிணையில் விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அதேபோல், அதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை அனுமதிப்பதை எதிர்க்கப் போவதில்லை என, சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்து இருக்கிறார். அரசாங்கம், பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவை, அரைகுறை நடவடிக்கைகள் என்பது தெளிவானதாகும். ஜஸீம், ஹிஸ்புல்லா ஆகியோரின் வழக்குகள், தற்போது சர்வதேச அளவில் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருவதால், அரசாங்கம் அவற்றை விரைவில் முடிவுக்கு கொண்டு வந்து இருக்கலாம்.

அதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்துக்கான திருத்தங்கள் கண்துடைப்பு என்றும் கூற முடியாத அளவுக்கு, அர்த்தமற்றவை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார்.

நீதி அமைச்சின் நடமாடும் சேவை என்பது, மனித உரிமைகள் பேரவையை நோக்கமாகக் கொண்டது மட்டுமல்லாது, குறிப்பாக காணாமலாக்கப்பட்டோருக்கான மரணச்சான்றிதழ்களை வழங்கியும் அவர்களுக்கான நட்டஈடு வழங்கியும், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விடயத்தை முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதாகத் தெரிகிறது.

அதாவது, காணாலாக்கப்பட்டோர் இறந்துவிட்டார்கள் என்று அரசாங்கம் கூறுகிறது. இதை ஏற்பது, காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு உணர்வு ரீதியாக, மிகவும் கடினமான விடயமாகும். ஆனால், மனித உரிமைகள் பேரவை, இதற்காக என்ன செய்யப் போகிறது என்பதும் முக்கியமான கேள்வியாகும்.

எவ்வளவு ஆர்ப்பாடடங்களை நடத்தியும் அரசாங்கம் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக, கொஞ்சமேனும் அசைந்து கொடுக்கவில்லை. பொதுவாக, காணாமலாக்கப்பட்டோர் அனைவர் தொடர்பாகவும், மனித உரிமைகள் பேரவை ஏதாவது ஒரு பிரேரணையை நிறைவேற்றலாம். அதற்காகச் சில படை அதிகாரிகளை, சிப்பாய்களைக் குறி வைத்து நடவடிக்கை எடுக்கலாம். அது, அரசியல் ரீதியாகவே முக்கியமானதாக இருக்கும்.

ஆனால், காணாமலாக்கப்பட்ட குறிப்பிட்ட தனித் தனி நபர்கள் தொடர்பில், ஏதாவது நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை உறுதி செய்ய, அதனால் முடியுமா என்பதே பிரச்சினையாகும். அவர்களது சொத்துப் பிரச்சினை, அவர்களது மனைவி, கணவன் ஆகியோரது வாழ்க்கைப் பிரச்சினைகள் இருக்கின்றன.

இதுவும் அரசியல் தீர்வா, அபிவிருத்தியா என்ற பிரச்சினை போலானதாகும். தீர்வுக்குப் பின்னர் தான், அபிவிருத்தி என்று இருந்தால் அதற்காக எவ்வளவு காலம் பொறுத்திருப்பது என்ற கேள்வி எழுகிறது. ஆட்களை காணாமல் செய்தவர்களைத் தண்டித்துவிட்டுத் தான், அவர்களது தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றால், அதற்காக எவ்வளவு காலம் காத்திருப்பது? அரசாங்கத்துக்கு இது பிரச்சினையில்லை. இந்தத் தெரிவை மேற்கொள்வதே, தமிழ் தலைவர்கள் முன் இருக்கும் சவாலாகும்.

## கடிதங்கள்

### மலையகத்துக்குச் செல்லும் சிமெந்து லொறிகளை இடைவழியில் மடக்கும் தரகர்கள்

ஊவா மாகாணத்தில் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால், தனியார் மற்றும் அரச நிர்மாணப் பணிகள் ஸ்தம்பித நிலையிலுள்ளன. குறிப்பாக, பதுளை, பண்டாரவளை, ஹாலி-எல, எல்ல, வெலிமடை, அப்புத்தளை, ஊவா பறணகம, பொறகஸ், சில்மியா புர, குருத்தலாவை, கெப்பெட்டிப் பொல, மஹியங்கணை, மொனராகலை, வெல்லவாய, அதிலிவெவ, சியம்பலாண்டுவ, நுவரேலியா, நானு ஓயா, தலவாகலை, கொட்டகல, மஸ்கெலியா, பொகந்தலாவ, நோட்டன், கண்டி, கம்பளை, கலஹா, அக்குரணை, மடவெல மற்றும் இதர மலையக பிரதேசங்களிலும் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதன் காரணமாக, அரச பாடசாலைகள் மாத்திரமல்லாது இதர அரச அபிவிருத்திப் பணிகளும் வீடு மற்றும் அலங்கார கல் வகைகள் தயாரிப்போர் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி, நாளாந்தம் தொழில் புரிவோர் தமது தொழிலை இழக்க நேரிடுவதாகவும் அதிருப்தியும் விசனமும் தெரிவித்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, கொழும்பில் இருந்து மலையகத்துக்கு வரும் சிமெந்து லொறிகளை இடைமறிக்கும் தரகர்கள், தாங்கள் நினைத்த விலைக்கு, வர்த்தகர்களுக்கு மறைமுகமாக வழங்கி வருவதால், சிமெந்து பக்கெற்களில் பொறிக்கப்பட்ட ரூபாய் 1,350/= விலையைவிட ரூபாய் 500/= அதிக விலை கொடுத்து வாங்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அதிருப்தியும் கவலையும் தெரிவிக்கப்படுகின்றது.

–எம்.ஏ.எம். ஹசனார்

சென்னை:

நடிகர் விஜயின் மக்கள் இயக்கத்தினர்

# உள்ளூராட்சி தேர்தலில் களமிறங்கினர்

## சுயேச்சையாக களமிறங்குகின்றனர்

தமிழகத்தில் தற்போது நடக்க உள்ள நகர்ப்புற உள்ளூராட்சி தேர்தலில் பெயர், மன்றக் கொடி உள்ளிட்டவற்றை பயன்படுத்த, விஜய் தரப்பில் இருந்து, இரசிகர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் உற்சாகமான விஜய் ரசிகர்கள், உடனடியாக மாநில தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளை சந்தித்து, ஓட்டோ சின்னம் ஒதுக்க கோரினர். ஆனால், விதிமுறைகளை சுட்டிக்காட்டி, ஓட்டோ சின்னம் வழங்க அதிகாரிகள் மறுத்தனர்.

தற்போது, தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. பிரதான கட்சிகள் கூட்டணி பேரம்,



வேட்பாளர் அறிவிப்பு என களத்தில் இறங்கிஉள்ளனர். அவர்களுக்கு போட்டியாக விஜய் ரசிகர்களும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுயேச்சையாக களமிறங்குகின்றனர். 'அதிகாரப்பூர்வ வேட்பாளர் பட்டியலை விஜய் அறிவிப்பார்' என விஜய் மக்கள் இயக்க மாநில பொதுச் செயலர் ஆனந்த் தெரிவித்திருந்தார்.

இன்னும் அதிகாரபூர்வ பட்டியல் வெளியாகாத நிலையில், சென்னையில், பூந்தமல்லி உள்ளிட்ட பகுதியில், விஜய் ரசிகர்கள் பிரசாரத்தை தொடங்கி விட்டனர். ஏற்கெனவே நடந்த ஊரக உள்ளூராட்சி தேர்தலில், விஜய் ரசிகர்கள் 129 இடங்களில் வெற்றி பெற்றனர். இம்முறை வெற்றி பட்டியல் பல மடங்கு அதிகமாகும் என, விஜய் ரசிகர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி:

# ஒன்லைனில் நாடக விழா

கொரோனா தொற்று காலத்தில், நலிந்த நாடக கலைஞர்களுக்கு உதவும் வகையில், மொத்தம் 35 குழுக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு ஒன்லைன் மூலம் நாடகவிழா நடைபெற்று வருகின்றது.

கொரோனா தொற்று காரணமாக, பார்வையாளர்கள் இன்றி நடத்தப்படும் நாடக விழா முழுவதையும் வீடியோ பதிவு செய்து, தென்னக பண்பாட்டு இணையதள பக்கத்தில் பதிவேற்றப்பட உள்ளது. நாடக விழா, ஏழாம் திகதி வரை நடக்கிறது.

பன்னா

# பொலிஸ் நிலையத்தில் கற்பிக்கும் அதிகாரி



பொலிஸ் நிலையம் ஒன்றில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக பாடம் எடுத்து வரும் பொலிஸ் அதிகாரி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

மத்திய பிரதேசத்தில், பிரஜ்பூர் கிராமத்தில், பகத் சிங் (41) என்ற பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர், காலை 7 மணி முதல், 10 மணி வரை ஆசிரியராக இருந்து, மாணவர்களுக்கு பாடம் எடுத்து வருகின்றார். பின்னர், 10 மணியிலிருந்து பொலிஸ் அதிகாரியாகத் தன் கடமைகளை செய்து வருகிறார். அத்துடன் பொலிஸ் நிலையத்தில் மாணவர்களுக்காக நூலகம் ஒன்றையும் அமைத்துள்ளார். இது மட்டுமல்லாமல், அரச வேலைவாய்ப்பு உள்ளிட்ட போட்டிப் பரீட்சைகளுக்குத் தேர்வுகள் எழுதும் மாணவர்களையும் அவர் தயார்படுத்தி வருகிறார்.

இராமேஸ்வரம்

# தனுஷ்கோடி 3ம் தீடையில் புத்தளத்தைச் சேர்ந்த படகு

தனுஷ்கோடி 3ம் மணல் தீடையில் இலங்கை படகு கரை ஒதுங்கியது. இப்படகில் இருந்து கடத்தல்காரர்கள் இராமேஸ்வரத்திற்குள் ஊடுருவி உள்ளனரா என பொலிஸார் விசாரிக்கின்றனர்.

நேற்று முன்தினம் (30) தனுஷ்கோடி அரிச்சல்முனையில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரமுள்ள 3ம் மணல் தீடையில், புத்தளத்தைச் சேர்ந்த 22 அடி நீளமுள்ள பைபர் கிளாஸ் படகு கரை ஒதுங்கி கிடந்தது. மத்திய, மாநில பாதுகாப்பு படையினர் ஆய்வு செய்து படகை மீட்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இப்படகில் இருந்து இலங்கை, தமிழகத்தை சேர்ந்த கடத்தல்காரர்கள் சிலர் அல்லது பயங்கரவாதிகள் இராமேஸ்வரம், மண்டபம் பகுதிக்குள் ஊடுருவி இருக்க கூடும் என்பதால் பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

கேரளா

# டிஸ்னி பொம்மைகள் சேகரித்து புதிய சாதனை

கேரளாவை பூர்வீகமாக கொண்ட டுபாயில் வசித்து வரும் தொழிலதிபரான ரிஸ்வானா கஹோரி என்ற 33 வயது பெண்மணி டிஸ்னி ப்ளஸ் கார்ட்டூன் கதாபாத்திரங்களில் வரும் பொம்மைகளை சேகரிப்பதை பொழுதுபோக்காக வைத்துள்ளார். இதுவரை 1,350 டிஸ்னி ப்ளஸ் பொம்மைகளை சேகரித்து, 'லிம்கா' சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறார்.

ரிஸ்வானாவின் சிறு பருவத்தில் அவரது அப்பா அவருக்கு டிஸ்னி பொம்மைகளை வாங்கிக்கொடுத்துள்ளார். அப்போது அதனை சேகரிக்க ஆரம்பித்த ரிஸ்வானா, தொடர்ந்து 25 வருடங்களாக டிஸ்னி பொம்மைகளை சேகரித்து வருகிறார்.

ரிஸ்வானா தன்னிடம் உள்ள பொம்மைகள் அனைத்தும் விலைமதிப்பற்றவையாக கருதுகிறார். அவரிடம் உள்ள பொம்மைகளின் ஒட்டுமொத்த மதிப்பு மூன்று கோடி இந்திய ரூபாய் இருக்கு என கணிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே யாரும் 1,300 டிஸ்னி பொம்மைகளை சேகரித்து வைத்திருக்க வாய்பில்லை எனக் கூறும் ரிஸ்வானா, தனது சேகரிப்புகளை முந்த யாருமே கிடையாது என உறுதியாக நம்புகிறார்.

கேரளா

# கேரளாவை கலக்கும் புட்டு ஐஸ்கிரீம்



தமிழ்நாட்டுக்கு இட்லி, கேரளாவுக்குப் புட்டு, ஆந்திரா, ஐதராபாத் பிரியாணி, கர்நாடகா, மைசூர் தோசை என அனைத்து மாநிலங்களுக்கும் தனித்துவமான உணவுவகைகளை அடுக்கிகொண்டே போகலாம்.

கேரளாவின் பாரம்பரிய உணவான புட்டுப் பாத்திரத்தில் தயாரிக்கப்படும் 'புட்டு ஐஸ்கிரீம்' மீது கோன்பிளக்ஸ், உலர்ந்த பழங்கள், சொக்லெட் சிப்ஸ், நட்ஸ் என விதவிதமான டொப்பிங் தூவப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

கேரளாவின் பாரம்பரிய உணவு தயாரிக்க பயன்படும் புட்டு குழலில் இருந்து, குளு, குளு ஐஸ்கீரிம் வருவதை கண்டு ஆச்சரியமான வாடிக்கையாளர்கள் பலரும் அதனை வீடியோவாக எடுத்து இணையத்தில் பதிவேற்றியுள்ளனர்.

புதுடெல்லி

பட்ஜெட் உரை பெட்டகங்கள்

# பளபள சூட்கேஸ், துணிப்பை, டேப்லெட்



2022 - 23 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் நேற்று (01) தாக்கல் செய்தார்.

ஆண்டாண்டு காலமாக பட்ஜெட் உரை அடங்கிய பெட்டி, பளபளப்பாக உயர்தர தோல் பெட்டியாக இருந்து வந்தது. இந்நிலையில் இந்த மரபை 2019இல் அப்போதைய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், சிவப்பு நிற துணிப்பையை தூக்கி வந்து மாற்றினார்.

பிரிட்டிஷ் ஆட்சியில் பட்ஜெட் உரையானது 'கிளாட்ஸ்டோன் பொக்ஸ்' எனப்படும் பெட்டியில் கொண்டுவரப்படும். பிரிட்டன் கொலனி ஆதிக்கத்தின் அடையாளமாக, சூட்கேஸில் உரையை எடுத்துவருவது, கொலனி ஆதிக்க முறையை ஏற்றுக்கொள்வதாக இருப்பதாகக் கூறி அந்த முறை மாற்றப்பட்டது. "பிரிட்டிஷ் ஹேங்கோவரில் இருந்து விடுபட்டோம்" என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார். இன்று நிர்மலா சீதாராமன், பட்ஜெட் உரையை 'டேப்லெட்'இல் வைத்துள்ளார். பிரதமர் மோடி டிஜிட்டல் இந்தியா கொள்கையை போதித்து வருவதால், பேப்பரை விடுத்து 'டேப்லெட்'டுக்கு மாறியதாகக் கூறினார்.

திருவனந்தபுரம்

பிரபல்ய 'பாம்பு பிடி மன்னன்' சுரேஷ்

# பாம்புதீண்டி உயிருக்கு ஆபத்தான நிலை

கேரளா, திருவனந்தபுரம் பகுதியை சேர்ந்தவர் வாவா சுரேஷ். (வயது 48). சுரேஷ் பாம்பு பிடிப்பதில் வல்லவர். திருவனந்தபுரம் மட்டுமின்றி மாநிலம் முழுவதும் ஆபத்தான பாம்புகளையும் இலாவகமாக பிடித்து வனத்துறையிடம் ஒப்படைப்பார். இதனால் இவரை கேரள மக்கள் 'பாம்பு பிடி மன்னன்' என்று அழைப்பது வழக்கம்.

இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாம்புகளை பிடித்துள்ளார். இந்த நிலையில் கோட்டயம் குடியிருப்பு பகுதிக்குள் நல்ல பாம்பு ஒன்று சுற்றி வருவதாக சுரேசுக்கு தகவல் தெரிவித்தனர். மாலை 4.30 மணிக்கு பாம்பு இருக்கும் இடத்தை கண்டுபிடித்து, அதைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இலாவகமாகப் பாம்பை பிடித்த சுரேஷ், அதனை ஒரு பிளாஸ்டிக் பையில் அடைக்க முயன்றார். அப்போது, பாம்பு அவரது வலது முழங்காலில் கடித்தது.

அவர் அதேயிடத்தில் மயங்கி விழுந்தார். உடனே அப்பகுதி மக்கள் அவரை, அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

# அமைச்சரவை முடிவுகள்




**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (31) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:**

### 01.கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்:

பிரம்பு, பித்தளை, உலோகப் பூச்சு, முகமூடி, தேங்காய் சிரட்டை, தங்காபரணம், கல்வெட்டு, சணல் மற்றும் துணியாலான கைவினைகள் போன்ற பாரம்பரிய குடிசைக் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சுக்கு 2022 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் 1,000 மில்லியன் ரூபாய்கள் மற்றும் வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் 150 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரம்பு, பித்தளை, களிமண், மரத்தளபாடங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கீழ்க்காணும் கருத்திட்டங்களை குறித்த நிதியொதுக்கீட்டைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- கிராமிய கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பயிரிடும் வேலைத்திட்டம்
- தேசிய மூலப்பொருட்கள் வங்கியை நிறுவும் வேலைத்திட்டம்
- ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில் முயற்சியாளரை உருவாக்கும் கருத்திட்டம்
- மர உற்பத்திகளுடன் தொடர்புடைய கைவினைப் பொருட்கள் மற்றும் செயன்முறைக்கான புத்தாக்க நிலையமொன்றை நிறுவும் கருத்திட்டம்
- கிராமியக் கைத்தொழில்களுக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தை ஊக்குவிப்பு வேலைத்திட்டம்
- கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில் கிராமங்கள் ஒன்றிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டம்
- தேசிய கம்மாலைக் கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டம்

### 02.பசுமை ஹைதரசன் உற்பத்தி:

2050 ஆம் ஆண்டளவில் காபனற்ற சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை வகுத்துள்ளது. அந்நோக்கத்தை அடைவதற்காக எரிசக்தி விநியோக வலையமைப்பை மாற்றியமைத்து சுவட்டு (Fossil) எரிபொருள் பாவனையிலிருந்து தூய எரிசக்தி உற்பத்திகள் மற்றும் பாவனைக்கு படிப்படியாக செல்ல வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, மின்சக்தி மற்றும் போக்குவரத்துத் துறைகளைப் போலவே வெப்ப உலைகளைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகளில் புகை வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அந்நிலைமையின் கீழ் நோர்வேயின் மிதக்கும் சூரிய மற்றும் காற்றடைப்பைப் பயன்படுத்தி பசுமை ஹைதரசன் உற்பத்தி செய்யும் முன்னோடிக் கருத்திட்டமொன்று பற்றிய சாத்தியவள ஆய்வை நடாத்துவதற்காக இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் Green Hydrogen India (Pvt) Ltd. இற்கிடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக எரிசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03.சமுத்திர அனர்த்த சமகால நிலைமை:

சமுத்திர அனர்த்தத்திற்கு உள்ளாகிய எம் வீ எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் கழிவுகள் மற்றும் அழிவடைந்த பகுதிகளை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 120 நாட்களில் குறித்த பணிகளை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதுதொடர்பாக நீதி அமைச்சர் சமர்ப்பித்த கீழ்வரும் மேலதிக விடயங்கள் அமைச்சரவையால் கருத்தில் எடுக்கப்பட்டது.

- கழிவுகளை அகற்றும் செயன்முறையால் தொடர்ந்தும் சமுத்திரம் மாசடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக குறித்த செயன்முறையை கண்காணிப்பதற்காக வர்த்தகக் கப்பல்கள் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய கண்காணிப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- இதுவரை பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களுக்கும் முதற்கட்ட இழப்பீட்டுத் தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
- களுத்துறை மாவட்டத்திற்கான மீன்பிடித் தடையை முற்றாக நீக்குதல்.
- கழிவுகளை அகற்றும் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் இரண்டிலும் குறித்த தடை நீக்கப்படும்.
- மீன்பிடி மற்றும் கடல்சார் சூழல் கண்காணிப்பு அதிகாரசபையின் உரித்தின் ஒருபகுதியான 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ளது எனவும், மற்றும் எஞ்சிய உரித்தின் பங்கைப் பெற்றுக் கொள்வதற்காக பீ அன்ட் ஐ கம்பனியுடன் கலந்துரையாடப்பட அனுமதி.
- கடல்வாழ் உயிரினங்களின் உடற்கூற்று மாதிரிகள் மற்றும் ஏனைய மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக வெளிநாட்டு ஆய்வு கூடங்களுக்கு அனுப்புதல்.
- அவுஸ்திரேலியாவின் ஹெல்மோர் கம்பனியால் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 04.நீதி அமைச்சின் நல்லிணக்க வேலைத்திட்டம்:

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, தென்மாகாணத்தில் மாத்தறை மற்றும் மத்திய மாகாணத்தில் நுவரெலியா போன்ற மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடமாடும் சேவைகள் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் 04 இனை இவ்வாண்டில் நடாத்துவதற்கு நீதி அமைச்சு திட்டமிட்டுள்ளது. காணி, உத்தியோகபூர்வ ஆவணங்கள், சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல், நீதி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கள உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டுவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 2022 ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை நடத்தப்பட்டுள்ளது. குறித்த நடமாடும் சேவைகள் வேலைத்திட்டம் தொடர்பாக அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி விடங்களை அமைச்சரவையால் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

### 05.தெல்கந்த சொகுசு அடுக்குமாடிக் கருத்திட்டம்:

கிராமிய வீடமைப்பு, கட்டுமானம் மற்றும் கட்டடப் பொருட்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படும் ஓசன் விவ் டிவலொப்மன்ட் கம்பனிக்குச் சொந்தமான தெல்கந்தவில் அமைந்துள்ள 100 பேர்ச்சர்ஸ் காணியில் 70 சொகுசு வீட்டு அலகுகளுடன் கூடிய அடுக்குமாடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு செலவுச் சுமையற்ற வகையில் முதலீட்டாளர்கள் மற்றும் முற்கூட்டிய விற்பனை முறையின் கீழ் இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கமைய குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 07. மசகு எண்ணெய்யை விநியோகித்தல்:

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்கு தேவையான மசகு எண்ணெய் 2022 ஜூலை மாதம் வரைக்கும் விநியோகிப்பதற்காக தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் வருகின்ற காலங்களுக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இச்சுத்திகரிப்புக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக சைப்பிரஸ் நாட்டின் Terra Navis Group இனால் கோரப்படாத முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 180 நாட்கள் கடன் அடிப்படையில் மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தர பெறுகைக் குழுவின் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதன் ஆரம்ப கட்டமாக 450,000 பீப்பாய்கள் கொண்ட கப்பல் தொகையை விநியோகிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சீனா

# களைகட்டும் புலி வருடம்

சீனாவில் நேற்றையதினம் (02) புத்தாண்டு மலர்ந்துள்ள நிலையில் அங்கு புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களைகட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் 12 மிருகங்களின் பெயரில் வருடப் பிறப்பை கொண்டாடுவார்கள். 12 ஆண்டுகள் முடிந்தவுடன் மீண்டும் அதே சுழற்சி ஆரம்பமாகும். அதன்படி நேற்று முன்தினத்துடன் எருது வருடம் முடிவடைந்து, புலி வருடம் ஆரம்பித்துள்ளது.



அந்நாட்டுக் கலாசாரத்தின் படி, புலி, வலிமை மற்றும் தைரியம் இரண்டையும் குறிக்கிறது. அதன்படி இந்தப் புதிய வருடம் துயரத்திலிருந்து மக்களை மீட்டு அமைதியை கொடுக்கும் என்று நம்பப்படுகிறது.

மேலும் இதனையொட்டி உலக நாடுகளில் இருக்கும் லட்சக்கணக்கான சீன நாட்டு மக்கள், புது வருடத்தை கொண்டாட தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையிலும் பிற நாடுகளிலிருந்து சீனாவிற்கு செல்லக்கூடிய மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

சாரதி அனுமதிப்பத்திரமின்றி

## 70 ஆண்டுகளாக வாகனம் செலுத்திய நபர்

நபர் ஒருவர் வாகன அனுமதிப் பத்திரமின்றி 83 வயது வரை பொலிஸாரிடம் சிக்காமல் வாகனம் செலுத்தியுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் புல்வெல் என்னும் பகுதியை சேர்ந்த 83 வயது முதியவரே இச்செயலில் ஈடுபட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் முதல் முறையாக உரிமம் இல்லாமல் வாகனம் செலுத்தியமைக்காக பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் சமீபத்தில் பிடிபட்டபோதே இவ்விடயம் அம்பலமாகியுள்ளது.

விசாரசணையின் போது அவர் தனது 12 ஆவது வயதில் இருந்து வாகனம் செலுத்தி வருவதாகவும், 70 ஆண்டுகளாக சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் தான் வாகனம் செலுத்தி வந்துள்ளதாகவும், இதுவரை விபத்து எதுவும் ஏற்படுத்தியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி இல்லாமல் தான் வாகனம் ஒட்டி வந்த போதும், இன்று வரை பிடிபடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறு இருப்பினும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதம் மற்றும் தண்டனை குறித்த விவரம் எதுவும் வெளியிட்படவில்லை

ஆப்கானிஸ்தான்

## ஆண் வேடம் தரித்து வெளியே செல்லும் பெண்கள்




ஆப்கானிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், அங்கு பெண்களுக்கு எதிரான பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மையில் பெண்கள் தொலைக்காட்சித் தொடர்கள் மற்றும் விளம்பரங்களில் நடிக்கக் கூடாது; ஆண்களின் துணையின்றி வெளியே செல்லக்கூடாது எனப் பல்வேறு கடுமையான சட்டங்களை தலிபான்கள் அமல்படுத்தியுள்ளனர்.

மேலும், இச் சட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளையும் விதித்து வருகின்றனர்.

இதன் காரணமாக விவாகரத்தான, அல்லது தனியாக வாழும் பெண்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளியே செல்ல வேண்டிய கட்டாயத்துக்குள்ளான பெண்கள், ஆண்களைப் போல உடை அணிந்து வீட்டை விட்டு வெளியே செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் பிரபல ஊடகமொன்று அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த செய்தியானது தற்போது உலகளவில் பெரும் பேசுபொருள் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## நாக்கில் வளர்ந்த முடி



பெண்ணொருவருக்கு நாக்கில் முடி வளர்ந்த விநோத சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தைச் சேர்ந்த 42 வயதான கேமரூன் நியூசம் என்ற பெண்ணுக்கே இவ்வாறு நாக்கில் முடிவளந்துள்ளதாகத் தெரிவிக்கப்ட்டுள்ளது.

குறித்த, செல் கார்சினோமா என்ற பெண் நாக்குடன் தொடர்புடைய அரிய வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும், நாக்கில் உருவான புற்று நோய் கட்டியை நீக்குவதற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதாகவும், சிகிச்சையின் போது அவரது கால் திசுக்களால் புற்று நோய் கட்டிகள் நீக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## உலக சாதனை படைத்த மின்னல்



கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி அமெரிக்காவின் தென் பகுதி வானில் வெளிப்பட்ட ஒரு மின்னலின் பதிவு புதிய உலக சாதனை படைத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இம்மின்னலானது அமெரிக்காவின் மிசிசிப்பி, லூசியானா, டெக்சாஸ் முழுவதும் மொத்தம் 770 கிலோ மீற்றர் தூரம் தெரிந்ததாகவும் ஐ.நாவின் உலக வானிலை அமைப்பு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது லண்டன் நகரில் இருந்து ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரம் வரை உள்ள தூரத்திற்கு சமமானது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதியன்று தெற்கு பிரேஸில் பகுதியில் பதிவான ஒரு மின்னலின் தூரத்தை விட 60 கிலோ மீற்றர்கள் அதிகமாக அமெரிக்க மின்னல் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இயற்கை நிகழ்வுகளின் அசாதாரண பதிவுகள் என ஐ.நா வானிலை மற்றும் கால நிலை அதிகாரி ராண்டால் செர்வெனி தெரிவித்துள்ளார்.

ஈரான்

## பராமரிப்பாளரைக் கொன்றுவிட்டு தப்பிச் சென்ற சிங்கங்கள்

மிருகக் காட்சிசாலையொன்றில் கூண்டில் இருந்து வெளியேறிய பெண்சிங்கமொன்று உணவு கொடுக்க வந்த பாராமரிப்பாளரைத் கடுமையாகத் தாக்கிவிட்டு உடனிந்த மற்றுமொரு சிங்கத்துடன் தப்பிச் சென்ற சம்பவம் ஈரானில் இடம்பெற்றுள்ளது.

அந்நாட்டின் மர்காசி மாகாணம் அராக் நகரில் உள்ள மிருகக் காட்சி சாலையில் பல ஆண்டுளாக வளர்க்கப்பட்டு வரும் இரண்டு சிங்கங்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் சிங்கத்தின்



தாக்குதல்கருள்ளான பராமரிப்பாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நீண்ட நேர முயற்சிக்குப் பின்னர் இரண்டு சிங்கங்களையும் பாதுகாப்பு படையினர் பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்மை குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுக் கிண்ணத் தொடரிலிருந்து

# வெளியேற்றப்பட்ட பரிஸ் ஸா ஜெர்மைன்

பிரெஞ்சுக் கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் வெளியேற்றப்பட்டது.

தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற நீஸுடனான விலகல் முறையிலான இத்தொடரின் இறுதி 16 அணிகளுக்கிடையிலான போட்டியில் தோற்றே பரிஸ் ஸா ஜெர்மைன் வெளியேற்றப்பட்டது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாமல் 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் காணப்பட்ட நிலையில், பெனால்டியில் 6-5 என்ற ரீதியில் நீஸ் வென்றிருந்தது.

பரிஸ் ஸா ஜெர்மைனில், லியனல் மெஸ்ஸி, கிலியான் மப்பே, ஜூலியன் ட்ரெக்ஸ்லர், மார்கோ வெராட்டி, ஜுவான் பேர்னார்ட் ஆகியோர் பெனால்டிகளை உட்செலுத்திய நிலையில், லியன்ட்ரோ பார்டெஸ், ஸ்கெவி சிமொன்ஸின் பெனால்டிகளை பரிஸ் ஸா ஜெர்மைனால் கடனடிப்படையில் நீஸுக்கு வழங்கப்பட்ட கோல் காப்பாளர் மார்சின் புல்கா தடுத்திருந்தார்.

டொட்டென்ஹாமிலிருந்து

## டெலே அலியைக் கைச்சாத்திட்ட எவெர்ற்றன்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரிலிருந்து மத்தியகளவீரரான டெலே அலியை இரண்டரை ஆண்டுகள் ஒப்பந்தமொன்றில், 40 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை அடையக்கூடிய தொகையொன்றுக்கு இன்னொரு பிறீமியர் லீக் கழகமான எவெர்ற்றன் கைச்சாத்திட்டுள்ளது.

25 வயதான அலியைக் கைச்சாத்திடுவதை எவெர்ற்றனின் புதிய முகாமையாளரான பிராங்க் லம்பார்ட் முதன்மையாகக் கொண்டிருந்ததுடன், அண்மைய காலங்களில் தடுமாறிய அவரை மீளக் கட்டியெழுப்பலாம் என நம்புகின்றார்.

## உபமெயாங்கை கைச்சாத்திட்ட பார்சிலோனா

ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுடன் முன்களவீரரான பியர்-எமெரிக் உபமெயாங்க் இணைந்துள்ளார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலிருந்து விலகிய பின்னரே பார்சிலோனாவில் 32 வயதான உபமெயாங்க் இணைந்துள்ளார்.

கடந்த மாத ஒழுக்க மீறல் காரணமாக ஆர்சனலுக்காக விளையாடியிருக்காத உபமெயாங்க், அதற்கு முன்பதாக 163 போட்டிகளில் 92 கோல்களைப் பெற்றிருந்தார்.



கல்முனை ரினோன் கிரிக்கெட் பயிற்றுவிப்பு நிலைய வீரர்களுக்கு

# விளையாட்டு உபகணங்கள் வழங்கி வைப்பு




எம்.என்.எம். அப்ராஸ், நூருல் ஹுதா உமர்

கோட்டமுனை விளையாட்டு கிராமத்தால் கல்முனையில் கிரிக்கெட் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

கிரிக்கெட் துறையை இளைஞர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக மட்டக்களப்பு மாவட்ட கோட்டமுனை விளையாட்டு கிராமத்தினரிடம் கல்முனை ரினோன் விளையாட்டு கழகத்தின் ரினோன் கிரிக்கெட் பயிற்றுவிப்பு நிலையத்தால் விடுக்கப்பட்ட வீரர்களுக்கு தேவையான கிரிக்கெட் உபகரணங்கள் வேண்டு கோளையடுத்து ஒரு தொகுதி கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள், கோட்டமுனை விளையாட்டு கிராமத்தால் அன்பளிப்பாக ரினோன் கழகத்தின் நிர்வாகத்தினரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

> கிரிக்கெட் துறையை இளைஞர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக கோட்டமுனை விளையாட்டு கிராமத்தினரிடம் கல்முனை ரினோன் விளையாட்டு கழகத்தின் ரினோன் கிரிக்கெட் பயிற்றுவிப்பு நிலையத்தால் விடுக்கப்பட்ட வேண்டு கோளையடுத்து உபகரணங்கள் வழங்கப்பட்டன

ரினோன் கிரிக்கெட் நிலையப் பணிப்பாளரும், பிரதான பயிற்றுவிப்பாளர் எம்.எப்.எம். அப்சல் ரிப்கியின் நெறிப்படுத்தலில் கழகத்தின் தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்மி தலைமையில் கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் குறித்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது .

இதன் போது பிரதம அதிதியாக கல்முனை தொகுதி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர் றிஸ்லி முஸ்தபாவும், கௌரவ அதிதியாக கோட்டமுனை விளையாட்டு கிராமத்தின் தலைவர் ஏ. சிவநாதன், சிறப்பு அதிதியாக கல்முனை அல் - மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரஸாக் மற்றும் பிரதியதிபர் ஐ.எல்.எம். ஜின்னா, விளையாட்டு உத்தியோகத்தர், எஸ்.சப்ரின் நஸார்,கோட்டமுனை விளையாட்டு கிராமத்தின் உறுப்பினர்கள், ரினோன் கிரிக்கெட் பயிற்றுவிப்பு நிலையத்தின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளார் எஸ்.எம். ரியால், நிர்வாக உறுப்பினர் ஏ.ஜே.எம். ரின்சாத், கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 02 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.